# மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ



மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 3—4—60 ஒலி 22

# சேனநாயகா சிந்திப்பாரா?

★ ★ ★

இலங்கையில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது! சேனநாயகா பதவிப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு விட்டார்!

ஆனால், அந்த நாட்டின் வாழ்வையும், அதன் தலைவிதியையும் நினைத்துப் பார்க்கும்போது உண்மையிலேயே நமக்குத் துயரும், துக்கமும் ஏற்படத் தான் செய்கின்றன!

"இலங்கைத் தீவின் அரசியலுக்கும், நமக்கும் சம்பந்தமில்லை" என்று விட்டுவிட முடியாத காரணத்தால் நாம் இலங்கையைப்பற்றிக் கவலைப்பட வேண்டி இருக்கிறது!

இலங்கைத் தீவு நமக்கு அண்டைநாடு! அத்தோடு நம் அருமைச் சகோதரர்கள் வாழும் நாடு! நமக்கு சொந்தமும், பந்தமும், பாசமும், நேசமும், உறவும் கொண்டாட உரிமையுள்ள நாடு என்று கூடச் சொல்லலாம்! இலங்கைக்கு நலிவு என்றால் இலட்சக் கணக்கான தமிழர்களின் வாழ்வு நலிந்துவிட்டது என்று பொருள்! இலங்கை அரசியலில் பெரும் கொந்தளிப் பென்றால் அது நம் வாழ்விலும் கொந்தளிப்பென்று அர்த்தம்!

சின்னஞ்சிறிய இலங்கைக்கு எப்போதுமே அமைதி கிடையாது! சுதந்திரத்திற்கு முன்பும் சரி, அதற்குப் பின்பும் சரி அங்கே ஒரே குழப்பம், ஒரே கொந்தளிப்பு தான்!

இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பின்பாவது அந்த நிலை ஒழியுமென்று நினைத்தோம! ஆனால் இந்தத்தேர்தல் முன்னைவிட பெரும் குழப்பத்தையே உண்டாக்கி விட்டிருக்கிறது!

"இந்தப் பொதுத்தேர்தல் தமிழர்களுக்கு ந வாழ்வளிக்கும், நல்ல நீதியை வழங்கும்" என்றுதான் எதிர்பார்த்தோம்! ஆனால் முன்னைவிட பெரும் தீமையைத் தான் உண்டாக்கி இருக்கிறது!

இந்தப் பொதுத்தேர்தல் தமிழர்களுக்கு மட்டும் தீமையை உண்டாக்கவில்லை! இலங்கைத் தீவிற்கே பெரும் கேட்டை உண்டாக்கி விட்டிருக்கிறது!

இலங்கைப் பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் பங்கு கொண்டன! அவைகளில் ஒன்று கூட கணிசமான வெற்றியை அடைய முடியவில்லை! எந்தக் கட்சிக்கும் நீண்ட ஆயுளோடு ஆட்சிபுரிய இந்தத் தேர்தல் அருள் புரியவில்லை! எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் அதற்கு அற்ப ஆயுள்தான் ஏற்படும்!

சேனநாயகாவை தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி 50 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது

கொலையுண்ட பண்டார நாயகா தலைவராக இருந்த லங்கா சுதந்திரக்கட்சி 46 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது

தமிழர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வரும் தமிழரசுக்கட்சி 15 இடங்களில் வெற்றி முரசம்கொட்டி இருக்கிறது!

தேர்தலுக்கு முன்பு பிரதமராக இருந்த லங்கா பிரஜா தந்திரக் கட்சி 94 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது! தகாநாயகாவே தோல்வி யடைந்தார்!

இதில் எந்தக்கட்சியும் ஆட்சிப்பொறுப்பை தனியாக ஏற்று நீண்ட நாள் வாழ முடியாது! என்றாலும் துணிந்து சேனநாயகா ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்

தமிழர்களைப் பொருத்த வரையில், ஐக்கிய தேசியக் கட்சி ஆண்டாலும், லங்கா சுதந்திராக் கட்சி ஆண்டாலும் ஒன்றுதான்!

இந்தக் கட்சியாளர்களனைவரும் தமிழர்களைப் பொறுத்த வரையில் துரோகிகள், வைரிகள் என்பதை எவரும் மறக்க மாட்டார்கள்!

கொலையுண்ட, லங்கா சுதந்திரக் கட்சித்தலைவர் பண்டார நாயகாவின் ஆட்சியில் தமிழர்கள் பட்ட துன்பம், கொடுமை யாவரும் அறிந்ததே!

அதே போல் பெரும் தோல்வியை அணைத்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்திருக்கும் தகா நயாகாவும், அவருடைய கட்சியும் தமிழர்களுக்கு இழைத்த பெருந் தீங்கை இதற்குள் மறந்துவிட முடியாது!

அதே போல் இப்போது ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் சேனநாயகா ஆண்டபோதும் சிங்களவர்கள் வாழ்வுதான் செழித்ததே தவிர, தமிழர்களின் வாழ்வு வளம் பெறவில்லை!

இந்த நிலையில் யார் ஆட்சி பீடம் ஏறினாலும் தமிழர்களுக்கு நல்வாழ்வு கிடைக்காது!

தமிழரசுக் கட்சி ஒன்றினால் மட்டும் தான் தமிழர்களுக்கு நல்வாழ்வை வழங்க முடியும்! ஆனால் பெரும்பாலும் சிங்கள மக்களைக்கொண்ட இலங்கையில் தமிழரசுக் கட்சியின் ஆட்சி ஏற்படவும் முடியாதல்லவா?

இந்த நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களின் கதி தான் என்ன என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்கக வேண்டும்!

இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிகள் சிங்களவர்கள் ஆட்சியிலிருந்து விடுபட்டு தனித் தியங்க வேண்டும்! இதற்கான பணிகளை இலங்கைத் தமிழர்கள் உடனடியாகச் செய்ய வேண்டும்!

இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் சேனநாயகாவும் மனிதாபி மானத்துடன் தமிழர்களை வாழ்விக்க வேண்டும்!

தமிழகத்திலிருந்து குடியேறிய தமிழ் மக்களால்தான் இலங்கை சிங்கார வாழ்வு பெற்றது என்பதை சேனநாயகா மறந்துவிடக் கூடாது! இலங்கைக்கு நல்வாழ்வளித்த தமிழர்களுக்கு மனித உள்ளத்தோடு நல்வாழ்வளிக்க முன்வர வேண்டும்!

தமிழகத்திலிருந்து குடியேறிய தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி, அவர்கள் பேசும் தமிழ் மொழிககு தக்க இடமளித்து ஆட்சி புரிந்தால் உங்களை உலகமே முன் வந்து பாராட்டும்!

இனம், மொழி வேற்றுமை இன்றி ஆட்சி புரிவது தான் நாகரிக உலகுக்கு ஏற்ற செயலாகும் என்பதை சேனநாயகா உணர வேண்டும்!

தமிழர்கள் வாழ எல்லா வழியையும் மேற்கொண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் நல்லாதரவையும் பெற்று ஆட்சி புரிய சேனநாயகா முன் வர வேண்டும்!

இதனைச் செய்திட்டால் சேனநாயகா பயமின்றி நீடித்து ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கவும் ஏதுவாகும்!

சேனநாயகா சிந்திப்பாரா? தமிழர்களுக்கு நல்வாழ்வளிக்க முன் வருவாரா?

# அரசியலை பொழுது போக்காக — நினைப்பவர்கள்; ஆஷாடபூதிகளைப் போன்றவர்களாவார்கள் !

## பொதுமக்கள் நல்வாழ்வுக்காக பாடுபடுவதே அரசியல்வாதியின் இலட்சியமாகும்!

### கலைஞர் கருணாநிதி முழக்கம் !



சென்னை சிந்தாதரிப் பேட்டை கலவச் செட்டித் தெருவில் சென்ற 19-3-60ம் தேதி மாலை 66 வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாபில் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது! கூட்டத்திற்கு திரு, ப. க வேணுகோபால் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தலைவர் வேணுகோபால் அவர்கள் பேசும் போது கழகத்தைப் பற்றியும், தலைவர்களைப் பற்றியும் காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் இழிவான முறையில் தாக்கி வருவதைக் கண்டித்தும் மாநில அமைச்சர்கள் தயாரித்துள்ள வரவு செலவு திட்டத்திலுள்ள சேதிகள் பற்றியும். திராவிட முன்னேற்றக் கழகம் நகர மன்றத்திற்குச் சென்று 10 மாதத்தில் செய்துள்ள பணிகளைப் பற்றியும் தி. மு. கழக உறுப்பினர்கள் தயாரித்துள்ள வரவு செலவு திட்டத்திலுள்ள நன்மைகளைப் பற்றியும், அதைப் பற்றி காங்கிரஸ் பிரச்சார ஏடுகளான மெயில், சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகள் பாராட்டி எழுதியுள்ளதை விளக்கியும் விரிவாகவும் பேசினார்!

பின்னர் 66-வட்ட தி, மு. க, நகர மன்ற உறுப்பினர் தோழர் தி. மணிவண்ணன் அவர்கள், தாம் நகர மன்ற உறுப்பினராக வந்த பின் இந்த வட்டத்தில் செய்துள்ள பணிகளையும், எதிர் கட்சியினர் தம் மீதும், தாம் சார்ந்துள்ள கட்சியின் மீதும் செய்து வரும் தப்புப் பிரச்சாரங்களை விளக்கியும், கழகத் தலைவர்களைப் பற்றி மேடைகளில் ஆபாசமாக பேசி வருவதைக் கண்டித்தும் பேசினார்!

பின் நகர மன்ற நிதிக் குழுத் தலைவர் திரு. வி. முனுசாமி அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது—

காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சென்னை நகர சபை நிர்வாகத்தைப் பற்றிப் பேசி வரும் தப்புப் பிரச்சாரங்களுக்கும், ரோடு வசதிகளும், சுகாதார வசதிகளும் தி. மு க. நகர சபையினர் செய்யவில்லை யென்றும், நிர்வாகத் திறமையோ, அனுபவமோ அற்றவர்கள் என்றும் கூறி வருவதற்கும் தக்க ஆதாரங்களுடனும், புள்ளி விபரங்களுடனும் பதிலளித்துப் பேசினார்! சென்னை சர்க்கார் தி.மு,க, நகர மன்றத்தில் வந்ததற்குப் பின் பல தீங்குகள் செய்து வருகிறதென்பதைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டினார்.

சென்னை மாநகராட்சித் தலைவர் எம். எஸ், அப்துல்காதர் அவர்கள் நகர மன்றம் 10 மாதத்தில் சாதித்த பணிகளை புள்ளி விபரங்களுடன் கூறி, நகர மன்றம் செய்து வரும் காரியங்களுக்கு சர்க்கார் தடைகள் செய்து வருவதை விளக்கினார்! நகர மன்றத்தைப் பற்றி அரசினரும், அவரது கட்சியினரும் செய்து வரும் தவறான பிரசாரங்களுக்குப் பதிலளித்து, வெகு விரைவில் தாம் ஒரு அறிக்கை வெளியிடப் போவதாகவும் குறிப்பிட்டார்!

சென்னை சர்க்காரும், அமைச்சர்களும் நியாயமாகச் செய்ய வேண்டிய உதவிகளை எதிர்கட்சியினராகிய தாங்கள் பதவியிலிருக்கிறார்களென்ற ஒரே காரணத்தை வைத்து செய்யாதிருப்பதை விளக்கிப் பேசினார்!

பின் நீண்ட கை ஒலிகளுக்கிடையே கலைஞர் மு. கருணாநிதி பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே மேயரவர்களே! நண்பர்களே தாய்மார்களே!

எனக்கு முன் பேசிய நமது மதிப்பிற்குரிய மேயர் அவர்களும். முனுசாமி, மணிவண்ணன் ஆகியவர்களும் காங்கிரஸ் கட்சியினரும், அதன் தலைவர்களும் அமைச்சர்களும் ஆபாசமாகப் பேசி வருவதைப் பற்றியும், மாநகராட்சி மன்றத்தின் மீது அவர்கள் சாட்டி வரும் குற்றச் சாட்டுகளைப் பற்றியும் பேசினார்கள், நான் அவர்களுக்குக் கூறுகிறேன், நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவது போன்று அவர்கள் தாக்குவதைப் பற்றியோ, குறை கூறுவதை பற்றியோ எந்தவித கவலையும் கொள்ள வேண்டாம். அவர்கள் தாக்கத் தாக்க தான் நாம் வளர்வோம் தாக்குதலுக்கு பின் இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறோம்!

நமது நண்பர்கள் மாநகராட்சி மன்றத்திற்குச் சென்ற பின் என்னென்ன செய்தார்கள் எதை-எதைச் சாதித்தார்கள். எதை எதைச் செய்யப் போகிறார்கள் என்பதை மிகப் பெருமிதத்தோடும், மகிழ்வோடும் உங்கள் முன் கூறினார்கள்,

அவர்கள் அப்படிக் கூறிக் கொண்டு வரும் போது எனக்கு வேதனையும், மனவருத்தமும் வெட்கமும் ஏற்பட்டது. அவர்கள் தாங்கள் நகரமன்றத்தில் 10 மாதத்தில் சாதித்த புள்ளி விபரங்களைக் கூறினார்கள்,

ஆனால் சட்டமன்றத்திற்குப் போய் என்ன செய்தேன், எதைச் சாதித்தேன்! இந்த. இந்த காரியங்களை செய்திருக்கிறேன்! இன்னின்ன காரியங்களுக்குத் திட்டம் போட்டிருக்கிறோம்! இன்னின்ன வேலைகளைச் செய்யப் போகிறோம்! இந்த, இந்தக் காரியங்களை செய்ய முடியாது, தடைபடுகிறது என்று மார் தட்டிக் கூற முடியாத நிலையில் இருக்கிறேன்!

நமது நண்பர்கள் கூறியபடி சட்டமன்றத்திற்குச் சென்ற எங்களுக்குத் தைரியமோ உறுதியோ இல்லையே! அங்கு எங்களுக்கு அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது!

அதற்கு அமைச்சர்கள் மீதோ காங்கிரஸ் கட்சியின் மீதோ குற்றம் சாட்டமாட்டேன்! அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள்! காங்கிரஸ் கட்சியினர் நமக்கு எதிர்ப்பானவர்கள்! அவர்கள் நமக்குத் தடையாகத் தான் இருப்பார்கள்! அவர்கள் மீது குறையோ, குற்றமோ சுமத்துவது அர்த்தமற்றது! அதற்குப் பதில் அந்தக் குற்றத்தை பெருமிதமாகக் கூடியிருக்கும் உங்கள் மீது தான் சாட்டுவேன்!

நீங்கள் நமது கழகத்தவரை சட்ட மன்றத்திற்குப் பெரும்பான்மையினரை அனுப்பியிருந்தால் — ஆளுங் கட்சியினரை அதட்டிக் கேட்கும் அளவிற்கு- பயப்படும் நிலைக்கு பெரும்பான்மையினரை அனுப்பியிருந்தால் நாங்கள் பல காரியங்களைச் செய்திருக்க முடியும். நமது அறிஞர் அண்ணா அவர்களும், நாங்களும் மக்கள் நன்மைக்காக

(4-ம் பக்கம் பார்க்க)

# எண்ணிக்கை பலம் இருப்பதால் எதையும் செய்யலாமென்று கருதாதீர்!

## எதிர்க்கட்சிகளின் திட்டங்களை ஆட்சியாளர்கள் நிறைவேற்ற வேண்டும்!

(கருணாநிதி பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னென்ன செய்ய வேண்டுமோ, செய்ய நினைக்கிறோமோ, அவைகளை யெல்லாம் நல்ல முறையில் செய்வோம்! செய்வதற்கு வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும் இப்போது அந்த நிலை எங்களுக்கு இல்லையே!

நாங்கள் எதிர்க்கட்சியினர் என்பதற்காக நாங்கள் சொல்லுகின்ற எந்த நல்ல காரியங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கு பெரும்பான்மையான பலம் இருக்கிறதென்ற காரணத்தால்—நாங்கள் சட்டமன்றத்தில் சிறுபான்மையினராக இருக்கிறோம் என்ற காரணத்தால் எங்களது கோரிக்கைகளை—திட்டங்களை அவமதிக்கிறார்கள். அதை அலட்சியப் படுத்துகிறார்கள்.

சட்ட மன்றத்தில் நாங்கள் பதினைந்து உறுப்பினர்கள் இருக்கிறோம். அவர்கள் நூற்றைம்பது பேர்கள் இருக்கிறார்கள். அதை வைத்துத்தான் காரியம் செய்து வருகிறார்கள். நல்லது எது, நன்மையானது எது என்று அவர்கள் பார்த்ததில்லை. பலத்தைத்தான் பார்க்கிறார்கள்.

ஜனநாயக முறைப்படி பார்த்தால் பலத்தை வைத்து எதுவும் செய்யக்கூடாது. கட்சி கண்ணோட்டத்தோடு எதுவும் செய்யக் கூடாது பலமற்றவர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியினராக இருந்தாலும் அவர்கள் சொல்லும் காரியம் நன்மையானதா? மக்களின் நன்மைக்குகந்ததா இது தேவையானதா என்று பார்த்து செயயவேண்டும் எண்ணிக்கை பலத்தைப்பார்த்து எதையும் செய்யக் கூடாது. எண்ண வளம் வேண்டும்!

தலைகளை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கக கூடாது! தலைக்குள் என்ன இருக்கிறதென்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எதிர்க்கட்சியினர் சொல்லும் திட்டங்கள்—அவர்கள் கூறும் கோரிக்கைகள்—அவர்கள் தரும் விபரங்கள், அவர்களது பேச்சுக்கள் சீரிய முறையில் இருக்கிறதா அவைகள் சரியானவைகள் தானா? மக்களின் நன்மைக்குகந்ததா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் பதினைந்து பேர்கள் தானே கூறுகிறார்கள்! அவர்கள் கூறுவதற்கு ஏன் மதிப்புக கொடுக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது.

இன்று மாநகர் மன்றத்தில் 45 உறுப்பினர்களைக் கொண்ட நமது கழகத்தினர் பொதுவுடைமைக் கட்சியினரின் ஆதரவைக் கொண்டு மாநகராட்சி மன்றத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்,

அதேபோன்று கோவை நகரில் பொதுவுடமைக் கட்சியினர் நமது கழகத்தினர் ஆதரவால் அங்கு நகரசபை பொறுப்பினை ஏற்றிருக்கிறார்கள்.

இதனை இரண்டு நகரசபைகளின் வேலைகளைக் குறைகூறிக் கொண்டும்; பொய்ப் பிரச்சாரம் செய்துக் கொண்டும் திறமையற்ற நிர்வாகம் நடந்து வருகிறதென்றும், அனுபவமற்றவர்கள் ஆட்சியை செய்து வருகிறார்களென்றும் குறைகள் கூறி வருகிறார்கள்.

சில தினங்களுக்கு முன் சட்ட மன்றத்தில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கோவை—சென்னை நகரசபை நிர்வாகத்தைத் தாக்கிப் பேசி, சுகாதார வசதிகள் சரிவர கவனிக்கவில்லையென்றும் ரோடு வசதிகள் சரிவர இல்லையென்றும் நகரங்களில் துா நாற்றம் வீசுகிறதென்றும். ஊழல்கள் மலிந்து விட்டதாகவும் பேசினார்கள்!

நகரமன்றத்தில் நாம் செய்து வரும் பணிகளால் நாம் செல்வாக்கடைந்து விடக்கூடாது. மக்கள் அன்பு நம்மிடம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த மாதிரி தப்பாகப் பேசி வருகிறார்கள்.

கோவைப் பகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திருமதி குழந்தையம்மாள் கோவையில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்றும் குழாயடியில் பெண்கள் சண்டை போட்டுக் கொள்கிறார்களென்றும் மக்கள் தண்ணீருக்காக அவதிப்படுகிறார்களென்றும் பேசினார்.

கோவை நகரில் எதிர்க் கட்சியினர் பொறுப்பேற்பதற்கு முன் தண்ணீர் பஞ்சமற்றிருந்ததா—காங்கிரஸ் கட்சியினர் பதவியிலிருக்கும் போது குழாயடிகளில் சண்டையில்லாதிருந்ததா நீண்ட காலமாக காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றிருந்ததே அன்று மக்கள் எந்தக் குறைகளுமின்றி நிம்மதியாக வாழ்ந்தார்களா? மக்கள் தங்கள் துன்பங்களைப் போக்கிக் கொள்ள—தங்கள் துயரங்களைத் துடைத்துக் கொள்ளவே எதிர்க்கட்சிகள் வருவதற்கு வாய்ப்பளித்தார்கள்!

சென்னை—கோவை நகரில் எதிர்கட்சிகள் நகரமன்றபொறுபேற்ற பின் தங்கள் கட்சியின் செல்வாக்கு குறைகிறதே என்ற பீதியாலும் தங்கள் கட்சி நிர்வாகத்தில் செய்யாத நன்மைகளை—பணிகளை செய்து வருகிறார்களே என்ற பயத்தாலும் எதிர்கட்சிகளின் ஆட்சியைஒழிக்கவே இந்தமாதிரியான தவறான பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிச்செய்வது ஜனநாயக முறையாகாது. சர்வாதிகாரப் போக்கேயாகும்.

சமீபத்தில் சட்டமன்றத்தில் இன்னொரு காங்கிரஸ் உறுப்பினர் பேசிய வினோதப் பேச்சைப் பார்த்தால் உங்களுக்கு அவர்களது போக்கு நன்கு விளங்கும்.

அப்படிப் பேசியவர்கள் யாரென்றும் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த நகரமன்றத்தேர்தலின் போது திராவிட முன்னேற்க் கழகம் வெற்றியடையக்கூடாதென்று அரும்பாடுபட்டவரும், புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்து வந்தவரும் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் பிறவி எதிரிகள் எண்ணிக் கொண்டிருப்பவருமான திரு. ராஜம் ராமசாமி அவர்களே தான், சட்டமன்றத்தில் நம்மைப்பற்றி பேசினார்.

நகரமன்றத்தேர்தலில் நமது கழகம் பெரும்பான்மையாக வெற்றியடைந்த பின், மாநகராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நமது கழகம் பெரும்பான்மையாக வெற்றியடைந்த பின் மாநகராட்சி மன்றத்தலைவர் தேர்தலில் ஈடுபடடபோது கடைசி நிமிடம் வரை நமது தோழர் தலைவராக வரக்கூடாதென்று அரும்பாடுபட்டார், என்னென்ன ஜாலங்கள் செய்து பார்த்தார், கடைசியில் நமது தோழர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியை அறிவிக்கப் போகும் நிமிடத்தில் மறைந்துபோன இந்த மாவீரர் ராஜம் ராமசாமிதான் நம்மை சட்டமன்றத்தில் தவறான முறையில் பேசினார்.

அவர் அப்படி என்ன பொன்னுப் பேச்சுகளைப் பேசிவிட்டார் என்று நினைக்கிறீர்கள்.

சென்னை மாநகராட்சியின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நமது தோழர்கள் ஆட்சியைச் சரிவர நடத்தவில்லையாம், ஆட்சி நடத்த திறமையற்றவர்களாம் அனுபவமற்றவர்களாம் நமது ஆட்சியில் சுகாதார வசதிகள் சரிவர இல்லையாம், நகரமுழுவதும் துர்நாற்றமடிக்கிறதாம் நம் ஆட்சியால் மக்கள் அவதிப் படுகிறார்களாம் நகரமன்றப் பொறுப்பை ஏற்று நடத்தும் நமது தோழர்கள் "அமைச்சூர்—கள்" என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்.

இவர் இப்படிக் கூறிய கூற்றுக்கு நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் உடனே அருமையான பதிலளித்தார்.

"திரு ராஜம் ராமசாமி அவர்கள் எங்களை அமைச்சூர்கள் என்று கூறியதை நான் ஒப்புக் கொள்கிறேன் "அமைச்சூர்" என்ற சொல்லுக்கு பொருள் தெரியாமலேயே எங்களை அப்படிக் கூறிவிட்டார்.

அமைச்சூர் நடிகன் என்றாலே தனக்கு ஓய்விருக்கும்போது கலைக்காகவும் மக்களுக்காகவும் எந்தவித பயனையும் எதிர்பார்க்காது பணியாற்றுபவர்களுக்குத் தான் அமைச்சூர்கள் என்று கூறுவது அதனாலேயே அவர் கூறிய சொல்லை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினேன்.

மற்றும் அவர் அனுபவமற்றவர்கள், திறமையற்றவர்கள் என்ற கூற்றைப்பற்றிக் கவலைப் படவில்லை. அதை பொது மக்களின் அபிப்பிராயத்திற்கே விட்டு விடுகிறேன்.

இப்படி நமது அண்ணா கூறியதும் ராஜம் ராமசாமி மௌனமாக இருந்துவிட்டார்.

இந்த வினோத மனிதரைப் பற்றி இன்னும் ஒரு முக்கிய விஷயம் உங்கள் முன் கூற விரும்புகிறேன்.

சட்ட மன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தப் பின் சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றி மாநில சர்க்கார் ஒரு புத்தகம் வெளியிட்டார்கள் "இவர்கள் யார்" என்ற தலைப்புள்ள அந்தப் புத்தகத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

படிப்பு, வயது முதலிய குறிப்புகளுடன் அவர்களுக்குப் பொழுது போக்கு என்ன என்று ஒரு கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. அந்தக் கேள்விக்கு ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்களுப் பிடித்தமான பொழுது போக்கு விளையாட்டுகளைக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த மாதிரியான கேள்விகள் எங்களையும் கேட்கப்பட்டது. எங்களுக்கு பொழுது போக்குக்கான நேரம் எங்கே இருக்கிறது. பல அலுவல்களுக்கிடையே தினம் மாலை ஆறு மணி ஆனதும் முச்சந்திகளிலும் தெருக்களிலும மக்களைச் சந்திக்கிறோமே. எங்களுக்கு பொழுதுபோக்கு நேரமில்லை என்று கூறி விடடோம்!

ஆனால் இந்த ராஜம் ராமசாமி தனக்கு பொழுது போக்கு என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? அவருக்குப் பொழுது போக்கு "அரசியலாம்"

(9-ம் பக்கம் பார்க்க)

# "சிவாஜியை" கண்டு பிடித்தது எங்கள் அண்ணா தான்!

## அவரது பேருக்கும், புகழுக்கும் எங்கள் அறிவுலக மேதையே காரணம்!

## பெண்வேடம் பூண்ட சிவாஜி வளர்ந்த வரலாறு இந்த அரசியல் அபலைகளுக்குப் புரியாது!

சென்னை மத்திய பகுதி மகளிர் மன்ற கிளையின் துவக்க விழா, சென்னை பீப்பிள்ஸ்பார்க் சாரணர் மைதானத்தில் (மிருகக் காட்சி சாலைக்கருகில்) 25-3-60 தேதி நடைபெற்றது.

பிற்பகல் 2 மணியிலிருந்து பல போட்டிகள் நடைபெற்றது! போட்டிகளில் பல தாய்மார்களும், சிறுமிகளும், சிறுவர்களும் கலந்து கொண்டார்கள்! பல போட்டிகளில் கழகத் தலைவர்களின் மனைவிமார்களும் அவர்களின் குழந்தைகளும் கலந்து கொண்டார்கள்

கயிறு இழுக்கும் போட்டி, ஓட்டப்பந்தயம் பந்தெறிதல், எலுமிச்சம் பழம் கரண்டியில் வைத்து ஓடுதல், இசை நாற்காலி போட்டி முதலியவைகள் நடைபெற்றது.

அறிஞர் அண்ணா அவர்கள் துணைவியார் ராணி அண்ணாதுரை நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் துணைவியார் பாப்பா நாராயணசாமி, ராஜேஸ்வரி ஷண்முகம் முதலியவர்களும் சி. பி. சிற்றரசு புதல்வி, ஏ. வி. ஆசைத்தம்பி புதல்வி, டி. வி. நாராயணசாமி புதல்வி, சத்தியவாணி முத்து புதல்வன், புதல்வி ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்

கயிறு இழுக்கும் போட்டியில் இருபத்திரண்டு பேர்கள் கலந்து கொண்டார்கள்! ஒரு பகுதிக்குப் பதினொரு பேர்கள் விதம் இருந்தார்கள்! ஒரு பகுதிக்கு அறிஞர் அண்ணா அவர்கள் துணைவியார் இராணி அண்ணாதுரையும்; மற்றொரு பகுதிக்கு திரு. டி. வி. நாராயணசாமி அவர்கள் துணைவியார் பாப்பா நாராயணசாமியும் தலைவர்களாக இருந்தார்கள்,

இராணி அண்ணாதுரை குழுவினர் வெற்றியடைந்தனர்!

வெற்றி பெற்றவர்களுக்கு தோழியர் பாப்பா நாராயணசாமி பரிசளித்தார்!

போட்டிப் பந்தயங்களுக்குப் முதன்மை நடுவனராக இராணி அண்ணாதுரையும் மற்ற நடுவினர்களாக பரமேஸ்வரி ஆசைத்தம்பி, பாப்பா நாராயணசாமி சி. அமராவதி, சி. பங்கஜவேணி ஆகியவர்கள் இருந்தார்கள்?

மத்திய பகுதி மகளிர் மன்ற செயலாளர் கமலா பாலசுந்தரம் விழா நன்கு நடை பெறுவதற்கான பணிகளைச் செய்து வந்தார்.

### திடீர் கடற்கரை காதலர்களுக்கு நடிகமணி நாராயணசாமி சாட்டை!

விழா தவங்குவதற்கு முன் அரங்கநாதன் இயக்கப் பாடல்களைப் பாடினார்.

பின் சில சிறுமிகள் நடனமாடினார்கள். அதில் ஐந்து வயது சிறுமியின் நடனம் மக்கள் மகிழும் வண்ணமிருந்தது.

திருமதி சத்தியவாணி முத்து அவர்கள், மகளிர் மன்ற சிறப்பு விழா நடைபெறும் நோக்கம் பற்றிப் பேசி அறிஞர் அண்ணா அவர்கள் துணைவியார் இராணி அண்ணாதுரை அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

பரமேஸ்வரி, ஆசைத் தம்பின் துணைவியார் வழி மொழிந்தார்.

தோழியர் சுலோசனை சிற்றரசு அனைவரையும் வரவேற்றார்.

தலைவர் இராணி அம்மையார் தலைமை வகித்துப் பேசியதாவது—

பெரியோர்களே, தாய்மார்களே! நண்பர்களே!

இந்த விழாவிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு மகிழ்கிறேன்.

மகளிர் அனைவரும் இந்த மன்றத்தில் சேர்ந்து மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!

தாய்க்குலத்தின் உயர்விற்காகவும் நாட்டுமக்கள் விடுதலைக்காகவும நாடு விடுதலை அடைவதற்காகவும் மகளிர் பாடுபட வேண்டும்! அடிமைகளாய் வீட்டில் இருந்து வந்ததை விட்டு பொதுப்பணியில் மகளிர் கலந்து கொள்ள ஆண்கள் உதவி செய்ய வேண்டும்.

இன்று போட்டியில் கலந்து கொண்ட தாய்மார்களை பாராட்டுவதுடன். இனிமேல் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!

எனக்கு இந்த மாபெரும் விழாவில் தலைமை வகிக்கும் பெருமை தந்தமைக்கு நன்றியும் வணக்கமும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்!

பின் தாமரைக்கண்ணி பால சுப்பிரமணியம், பார்வதி அம்மாள், மலர் முகத் தம்மாள் (இவர்கள் மூவரும் 1937-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு தமிழுக்காக உழைத்தவர்கள்) ராஜேஸ்வரி ஷண்முகம் சாவித்திரி, கலைச் செல்வி, மாணவி எஸ். பி. சற்குணம் சத்தியவாணிமுத்து ஆகியவர்கள் மகளிர் மன்றத்தின் அவசியம் பற்றியும் நாட்டு விடுதலைக்காக ஆண்களைப் போன்று பெண்களும் பாடுபட முன் வர வேண்டுமென்றும் கூறி மகளிர் மன்றத்திற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

பின் நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் பெருத்த கை ஒலிகளுடன் பேசியதாவது-

அன்புள்ள அண்ணியார் அவர்களே! தாய்மார்களே! நண்பர்களே! பெரியோர்களே!

இன்று இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்காக எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறிக் கொள்கிறேன்.

இந்த மத்திய மகளிர் மன்ற துவக்க விழாக் கூட்டத்திற்கு நமது அண்ணியார் தலைமை வகிக்கிறார்கள்! அவர்கள் முன்னிலையில் பேசும் படியான இந்தப் பெருமை கிடைத்ததற்காக அகமகிழ்கிறேன்!

நாடகக் கம்பெனியிலிருந்து என்னை விலக்கப்பட்டு அனாதையாக வெளியேற்றப்பட்ட போது என்னை உபசரித்து ஆதரித்து என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது நமது அண்ணியார் தான். எனக்கு காட்டிய அன்பிற்காகவும் அவர்களுக்கு என்றும் கடமை பட்டிருக்கிறேன்!

நான் சின்னஞ்சிறு வயதிலேயே நாடகக் கம்பெனியில் சேர்ந்து அதன் கட்டுத் திட்டங்களுக்கு அடங்கி கம்பெனிக்குள்ளேயே இருந்தவன்! அப்படிப்பட்ட நான் பகுத்தறிவு கொள்கையைக் கடைபபிடித்து பெரியார் தொண்டனாக இருந்தேன், பெரியார் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்பவனாக இருந்து வந்தேன். அதை முன்னிட்டே என்னை ஒரு நாடகக் கம்பெனியிலிருந்து விலக்கினார்கள்.

அப்பொழுது எனக்கு வெளி உலகம் தெரியாது. சென்னையே எந்த திக்கில் இருக்கிறது என்று தெரியாது அந்த நிலையில்தான் அண்ணாவை அணுகினேன் அவர் எனக்கு ஆதரவு தந்தார். அவர் என் முன்னேற்றத்திற்கு வழி காட்டினார். அப்படிப்பட்ட நேரத்தில் அண்ணியாரும் அண்ணாவின் அருமைத் தாயாரும் எனக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

நான் பெரியார் தொண்டனாக இருந்து பணியாற்றும் போது நமது அண்ணா அவர்களைக் கண்டு பேசி யிருக்கிறேன்.

ஆனால் அவரிடம் நான் ஆதரவு கேட்டது கும்பகோணத்தில நடந்த திராவிடர் கழக மாணவர் மகாநாட்டில் தான். அங்கு சென்று அவரிடம், என்னை நாடகக் கம்பெனியிலிருந்து கொள்கை காரணமாகப் பழி வாங்கப்பட்டதைக் கூறி ஆதரவு தர வேண்டினேன் அவர்களும் சம்மதித்து என்னைக் காஞ்சிபுரம் அழைத்துச் சென்று அங்கேயே இருக்கச் செய்து எனக்கு வேண்டிய உதவிகள் செய்தார்! அந்தச் சமயங்களில் நமது அண்ணியார் அவர்கள் கையாலேயே உணவளித்து ஆதரவு தந்தார். அதனாலேயே அவர்கள் முன் பேசும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்கிறேன் என்று கூறினேன்.

இந்த விழாவிற்கு என்னை வரும்படி கூறினார்கள். ஆனால் இடமும், நாளும் சரியாகக் கூறவில்லை. பின் தொலை பேசி மூலம் கூட்டத்திற்கு வரும்படி கூறினார்கள். எனக்கு கூட்டம் நடக்கும் இடம் ஆனைகவுனி என்று கூறினார்கள். நான் அங்கு சென்று தேடி அலைந்த பின் ஒரு சிறுவன் கூறியதற்குப் பின் இங்கு வந்தேன்.

சிறுவர்களுக்கெல்லாம் நமது கூட்டங்களைப் பற்றியும் கொள்கைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால நமது கழகம் எவ்வளவு சிறப்பாக வளர்ந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நான் ஆனைகவுனிக்குப் போய் அலைந்தபோது. எனக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தது, அந்த ஆனைகவுனிப் பக்கம் பலமுறை நடந்திருக்கிறேன்.

நமது அண்ணா அவர்கள் அதன் அருகில் கருப்பண்ணன் தெருவில் இருந்துவந்தார். அடிக்கடி அவரிடம சென்று அளவளாவிப் பேசிவருவேன்.

மற்றும் காலஞ்சென்ற நகைச் சுவை மன்னர் என், எஸ். கிருஷ்

(6-ம் பக்கம் பார்க்க)

# தாய்க்குலத்தின் உயர்வுக்கும், திராவிடத்தின் விடுதலைக்கும் மகளிர் பணியாற்ற வேண்டும்!

(டி. வி. நாராயணசாமி பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ணன் அவர்கள், நாடக முதலாளிகளால் வஞ்சிக்கப்பட்ட நடிகர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்தார், அந்தக் கம்பெனியில் எனக்குத்தான் முக்கிய பாத்திரமளிக்கப்பட்டு அங்கு நடித்துவந்தேன், அப்போது எனது நண்பர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் மற்றும் பலரும் நடித்து வநதோம்.

அப்போதும் இந்த ஆணை கவுனிப்பக்கம் பலதடவைச் சென்றிக்கிறேன்.

நமது அண்ணா அவர்கள் நகைச் சுவை மன்னரிடம் எனக்குச் சிபார்சு செய்து என்னை ஆதரிக்கும்படி செய்தார்.

அதன்படி அவர் என்னைப் போன்ற பலரை அவரது கம்பெனியில் வைத்து ஆதரித்தார்.

அந்தக் கலையுலக மேதைக்குப் பின் நமது புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தான் இருக்கிறார் அவர் இன்று நல்ல பணி செய்து வருகிறார்.

என். எஸ். கே. கம்பெனியில் நாங்கள் இருக்கும் போது எதிர்பாராத பெரும் சோதனையால் நகைச்சுவை மன்னர் சிறை செல்ல நேர்ந்தது. அப்போது அங்கு ஏற்பட்ட பிளவால் இரண்டு பகுதியாகப் பிரிந்தோம்! ஒரு பகுதி நடிப்பிசை புலவர் கே. ஆர், ராமசாமி அவர்கள் தலைமையிலும், மற்றொரு பகுதி சஹஸ்ரநாமம் தலைமையிலும் பிரிய நேர்ந்தது.

இன்று மகளிர் மன்ற திறப்பு விழா நடக்கிறது. இதில பலதாய்மார்கள் கூடியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் நம்முடைய இயக்கத்தில் முக்கியமாகப் பணியாற்றியவர்கள் தோழியர் சத்தியவாணி முத்தம்மையாரும் தோழியர் அலுமேலு அப்பாத்துரையார் போன்றவர்களே இருந்தார்கள். அதே போன்று இன்று பலதுறையில் உள்ளவர்கள் நம்முடன் இருக்கிறார்கள். கலை உலகில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். நமது இயக்கம் இன்று யாவரும் அதிசயிக்கும் படி வளர்ந்திருக்கிறது. இந்த நேரத்தில் தான் நமக்குப் பொறுமை வேண்டும். நமது அண்ணா அவர்கள் நமக்குக் கூறி வரும் கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும்!

இப்போதுகூட நமது அண்ணா அவர்கள் ஏதோ எதிர்பாராத விதமாக வரமுடியாமல் போகும் என்று நமது சத்தியவாணிமுத்து பேசும் போது கூறிய போது நீங்கள் பொறுமை இழந்து எல்லோரும் எழுந்து விட்டீர்கள். அது கூடாது.

இன்று நமது இயக்கத்திற்கு மிகவும் நெருக்கடியான நேரம் காங்கிரஸ் கட்சியினர் நமக்குப் பல தொல்லைகள் கொடுத்து வருவதுடன் நம்மை இழிவாகவும் ஆபாசமாகவும் தாக்கி வருகிறார்கள். நாம் வளர, வளர நமது எதிரிகள் நம்மீது ஆத்திரமடைந்து வருகிறார்கள்! ஆட்சியாளருக்குத் தெரிந்தே காங்கிரசார் நமக்குத் தொல்லைகள் கொடுத்து வருகிறார்கள்.

காங்கிரசுக்கு இன்று நாட்டில் செல்வாக்கு குறைந்து விட்டது! அதனால் எதிர்க்கட்சியினர் ஆத்திரமடைக்து வசைமாறி பொழிகிறார்கள்! கார்ப்பரேஷனில் நாம் ஆட்சிப பொறுப்பேற்றிருக்கிறோம்! அதனால் பொறாமை அடைந்து இழிவான முறையில் தாக்கி வருகிறார்கள்!

இப்படிப்பட்ட நேரத்தில் நமது தாய்மார்கள் தைரியமாக இங்கு கூட்டம் நடத்துகிறார்கள். நீங்கள் எல்லாம் எழுந்து போய் விட்டால் இங்கு தாய்மார்களுக்கு ஏதாவது தொல்லை ஏற்பட்டால் பாதுகாப்பு கொடுப்பது யார்? நீங்களெல்லாம் அப்படிச் செய்யக் கூடாது. நமது கூட்டம் எதுவானாலும், யார் பேசினாலும் கட்டுப்பாடாக இறுதி வரை இருக்க வேண்டும். நமது தலைவர்கள் வரவில்லையானால் அதற்கு பதில் யார் பேசினாலும் கடைசி வரை இருநது கூட்டத்திற்குச் சிறப்பு தந்து கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்.

இன்று கலைஉலகிலுள்ளவர்கள் எல்லாம் நம்மைப் பின் பற்றுகிறார்கள். ஆகவே நாம் மிகவும் கட்டுப்பாடாகவும். கண்ணியமாகவும் இருக்கவேண்டும்!

எனது நண்பர் சிவாஜி கணேசன் மேலை நாட்டிற்குச் சென்று வந்திருப்பதை வைத்துக் கொண்டு ஒரு சில அரசியல் அபலைகள் சிவாஜிகணேசன் சிறந்த நடிகராகி விட்டார். அவரைப் பாராட்டுகிறோம் என்று கூறிக்கொண்டு நம்மைத் தாக்குகிறார்கள். கலை உலகத்தை வைத்து அரசியலில் இழந்து வரும் செல்வாக்கை வலுப் பெறச் செய்ய முயலுகிறார்கள். இதனால் நாம் வலு விழந்து போக மாட்டோம்!

உங்களுக்குச் சிலருக்கு தெரிந்திருக்கலாம், சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். இருந்தாலும் இந்த சமயத்தில் உங்களுக்கு பழைய விஷயங்கள் கூற ஆசைப்படுகிறேன். அப்படிக் கூறுவதால் நான் தற்பெருமைக்கு என்னைப் பெருமை படுத்திக் கொள்ள கூறுகிறேன் என்று என்ன வேண்டாம்.

இன்று சிவாஜி கணேசனை சிறந்த நடிகராக, நடிகர் திலகமெனப் பாராட்டுகிறார்கள்.

நாங்கள்—நமது அண்ணா அவர்கள் 1944-லிலேயே அவரைச் சிறந்த நடிகராக ஏற்றுக் கொண்டோம், அவருக்கு கொடுக்க வேண்டிய பெருமையை அன்றே கொடுத்து விட்டோம்.

நமது அண்ணா அவர்கள் காஞ்சியில் இருக்கும் போது பல நாடகங்களை எழுதிக் கொடுத்தார். அதில் நாங்களெல்லாம் நடித்து வந்தோம், சந்திரோதயம் நாடகம் எழுதிக் கொடுத்தார். அதில் பலமுறை நடித்திருக்கிறேன்.

(7-ம் பக்கம் பார்க்க)

அமிர்தம்

‘குறவஞ்சி சிறப்பிதழ்’

எங்கும் விற்பனையாகிறது!

(இருவண்ண முகப்பு)

விலை 30 காசு

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கவிஞர் கண்ணதாசன்
பேராசிரியர் அன்பழகன்
என்.வி. நடராசன்
சிவாஜி கணேசன
முரசொலி மாறன்
முல்லைசத்தி
ப.உ. சண்முகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி
இராம அரங்கண்ணல்
ஆசைத்தம்பி
ஓ.ஏ. கே. தேவர்
மு. கருணாநிதி
டி. ஆர். பாப்பா
காசிலிங்கம்
ஜி. துரை
சாவித்திரி

ஆகியோரின் கருத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன.

அமிர்தம் ★ சென்னை-14.

# தன்னையே நம்பியிருப்பவர் புரட்சி நடிகர்!

# தன்னம்பிக்கையற்றவர் சிவாஜி!

(டி. வி. நாராயணசாமி பேச்சு)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் மற்றொரு நாடகத்தை எழுதினர். அதற்கு முன் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்று பெயரிடப்பட்டது: இப்போது அதற்கு "சந்திர மோகன்" என்று கூறப்படுவதாகும்.

அந்த நாடகத்தை நல்லமுறையில் எழுதி பாத்திரங்கள் சிறந்த முறையில் படைத்து அண்ணா அவர்களுக்கே உரிய அழகான —விறுவிறுப்பான—உயிரான வசனங்களை எழுதியிருந்தார்.

அந்த நாடகத்திற்கே உயிர் கொடுக்கும் பாத்திரங்கள் சிவாஜி. சந்திரமோகன் காகபட்டர்.

இதில் சந்திரமோகன் பாத்திரத்தில் நான் நடிப்பதென்றும், காகபட்டாராக அண்ணா அவர்கள் நடிப்பதென்றும் முடிவு செய்து சிவாஜிக்கு யாரைப் போடுவது சிவாஜி போன்றுஉருவமைப்பும், அதற்கேற்றதிறமையுள்ளவர் யாரென்றும் சிந்தித்தோம்! நான் அதற்கேற்றவர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.அவர்களே என அண்ணா அவர்களிடம் கூறினேன், அவரும் ஒத்துக்கொண்டு அவரைக் கேட்டு அனுமதி பெற என்னை அனுப்பினார்,

நமது புரட்சி நடிகர் அப்போது சைனாபஜாரில் வசித்து வந்தார்!

அவர் என் மீது அன்பும். பிரியமும் கொண்டவர்! என்னை நன்றாக நேசிப்பார். என்னை மதிப்போடு வரவேற்று ஆசையோடு பேசுவார். அவர் அப்போது கதருடையில் இருந்தார்! நம்முடைய இயக்கத்தில் அப்போது இல்லை! இருந்தாலும் என் மீதும், நமது அண்ணா அவர்களிடமும் பெரு மதிப்புக் கொண்டவர்! அவரிடம் சென்று என் விருப்பத்தையும் அண்ணா அவர்கள் விருப்பத்தையும் கூறி சிவாஜியாக நடிக்கக் கேட்டேன்! அவரும் சம்மதித்தார்! உடைகளும் தைக்கப்பட்டது! பின் அவர் கோவையில் படப்பிடிப்பு சம்மந்தமாக போனதாலும். பல சந்தர்ப்பங்களாலும் நடிக்க முடியவில்லை,

இதையெல்லாம் நான் உங்களிடம் உண்மையைக் கூறவே இங்கு கூறுகிறேன்! ஆனால் சிலர் சிவாஜி கணேசனிடமும் புரட்சி நடிகரிடமும் என்னைப் பற்றி தவறாகக் கூறிசிண்டு முடியப் பார்ப்பார்கள்! அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.அவர்களிடமும் எனக்குஉள்ள பாசமும் என்றும் மறையாது! அவரிடம்நான் கொண்டுள்ள மதிப்பும் குறையாது!

சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகம் நடைபெற பதினைந்து நாட்கள்தான் பாக்கி இருந்தது! ஆனால் "சிவாஜி மட்டும் கிடைக்கவில்லை. 'சிவாஜி யார்; "சிவாஜி" எங்கே என்று தேடினோம், கிடைக்கவில்லை! காலஞ்சென்ற எனது நண்பர் கே.பி. காமாட்சியிடம் சென்றோம்! குணசித்திர நடிகர் எஸ் வி. சுப்பையாவிடம் சென்றோம்! ஆனால் சிவாஜி கிடைக்கவில்லை! நாள் நெருங்கிக் கொண்டே வந்தது எனக்கு கவலை தந்தது. எனக்கு வேண்டிய நண்பர் ஒருவருடன் கலந்தேன்! அவர் நபக்த கணேசனை போடலாம் என்று கூறினார். பெண்வேடம் போட்டு வருபவராயிற்றே கணேசன், சிவாஜி வேடத்திற்கு பொருத்தமானவரா என்றேன்! அதற்கு அந்த நண்பர் "அவர் மூக்கு சிவாஜி மூக்கு போன்றிருந்தது! அவர் முகமும் அப்படி அமைந்திருக்கிறது என்று கூறினார், நானும் கணேசனின் மூக்கையும், முகபாவத்தையும், வைத்து சிந்தித்தேன். அவரையே சிவாஜி வேடத்திற்குப் போடுவதென்று முடிவுக்கு வந்தேன். என் முடிவை நமது அறிஞர் அண்ணா அவர்களிடம் கூறினேன்! ஒப்புக் கொண்டார்! நாடகம் நடைபெறும் நாள் நெருங்கி விட்டதால் உடை தைப்பதற்கு நேரமில்லை. "சிவாஜிக்கு" ஒரே உடையை தைத்து கோக்கலே மண்டபத்தில் நமது முன்னாள் தலைவர் பெரியார் அவர்கள் தலைமையில் மேற்படி நாடகம் நடத்தப்பட்டது.

தலைமை வகித்த பெரியார் இறுதியில் பேசும் போது "சிவாஜியாக நடித்த பையன் நன்றாக நடித்தார்" என்று கூறினாரே ஒழிய சிவாஜி என்ற பட்டம் தரவில்லை. ஆனால் நன்றாக நடித்தார். மக்கள் பாராட்டினார்கள்.

நான் உங்களிடம் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். சிவாஜியாக யார் வேடம் போட்டிருந்தாலும் நல்ல பெயர் வாங்க முடியும். காரணம் அண்ணா அவர்கள் அமைத்திருந்த பாத்திரப் படைப்பு அவ்வளவு சிறப்பாக இருந்தது. சிவாஜி காகப் பட்டரிடம் அடிமையாகி வணங்கப் போகிறான் என்பதை அறிந்த சந்திர மோகன் பேசும் வசனங்கள் சிவாஜியை உயர்த்துகிறது, பெருமையைத் தருகிறது. அந்த வசனங்களில் இருக்கும் உயிர் ஓவியம், விறு, விறுப்பு சிவாஜிக்கு நல்ல இடத்தைக் கொடுக்கிறது! அந்த வசனங்களைக் கேட்கும் கோழையும் வீரனாவான்.(தோழர் டி.வி.நாராயணசாமி அண்ணா அவர்கள் எழுதிய சந்திரமோகன் சிவாஜியிடம் பேசும் வசனங்களை நடிப்பு முறையில் பேசிக் காட்டினார்)

ஆகவே வசந்த சேனையாக நடித்து வந்த வி.சி. கணேசனை —பெண் வேடங்களில் நடித்து வந்த கணேசனை எதிர் காலத்தில் சிறந்த நடிகனாக வருவார் என்று பல ஆண்டுகளுக்குமுன்பு —1944-ம் ஆண்டிலேயே நமது அண்ணா அவர்களும் நாமும் கண்டு பிடித்தோம், பாராட்டினோம்! அவர் சிறந்த நடிகர் என்று நாங்கள் முடிவு செய்து அவருக்கு அளிக்க வேண்டிய சிறப்பிடம் கொடுத்த பின் இன்று அரசியலில் செல்வாக்கில்லாதிருக்கும் மா. பொ. சிவஞானமும் நடிப்பில் சிறந்தவர் என்று கூறிக்கொண்டு நம்மைத் தாக்கிவருவதனால் நாம் அழிந்து விடமாட்டோம்!

இன்று சிவாஜி கணேசன் கலை உலகில் உயர்ந்திருக்கிறார் என்பதற்காக அவர் பின்னாலிருந்து விளம்பரப் படுத்திக் கொள்ள நினைப்பவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை!

ஒருவர் பாரதி கணேசன் என்றும் ஒருவர், கட்டபொம்மன் கணேசன் என்றும் கூறி மகிழ்ந்தார்கள்! ஆனால் எதுவும் நிலைக்கவில்லை. அண்ணாவின் சிவாஜி தான் நிலைத்தது.

அண்ணா அவர்கள் ஒருமுறை கூறினார். "யார் எங்கிருந்து புகழடைந்தாலும் என் முத்திரை பொறித்திருக்குமே அதில் வேறொருவர் முத்திரை இருக்காது" என்று.

அதன்படி அண்ணாவின் முத்திரை பொறித்த அடையாளத்துடன் தான் சிவாஜி கணேசன் இன்று புகழடைந்து வருகிறார்.

சிவாஜி கணேசன் சிறந்த நடிகர் தான்! ஆனால் அவரிடம் நன்றியும் உள்ளன்பும் கிடையாது!

ஆனால் புரட்சி நடிகர் எம் ஜி. ஆர். அவர்கள் நல்ல நடிகர்—நன்றி உடையவர், அன்புடையவர், பெருந்தன்மை படைத்தவர்

சிவாஜி தன்னம்பிக்கையற்றவர்—திருப்பதி வெங்கடேசனையும், பழனியாண்டவரையும் நம்பியிருப்பவர்.

புரட்சி நடிகர் தன்னையே நம்பியிருப்பவர்! பல மக்களின் உள்ளன்பைப் பெற்றவர் மேல் நாட்டு நடிகர்களை போன்று சிறந்த நடிகர் என்று மக்களால் போற்றப் படுகிறவர்!

சிவாஜி கணேசனை நாங்கள் பதினேறு ஆண்டுகளுக்குமுன்பே சிறந்த நடிகர் என்று முடிவு செய்து விட்டோம்; இன்றும் அவரை சிறந்த நடிகரென்றே எண்ணி வருகிறோம். அவரை வைத்து அரசியல் வாழ்வை சிலர் நடத்துகின்றனர்!

உங்களுக்கு இன்னும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

பராசக்தி படத்திற்கு நடிகரைத் தேர்ந்தெடுக்க நமது அண்ணா அவர்களிடம் திரு.பெருமாள் அரக்கோணத்திற்கு வந்து நடிப்பிசைப் புலவரை நடிக்கச் செய்ய அனுமதி கேட்க வந்தார் அதற்கு நமது அண்ணா அவர்கள் நடிப்பிசைப் புலவர் வேலைக்காரிப் படத்தில் நடித்து மக்களின் அன்பைப் பெற்று விட்டார்! அதே போன்று புகழடைய வேண்டியவர் தோழர் கணேசன், அவரைப் போட்டு படமெடுங்கள். அவர் நல்ல நடிகர் என்று சிபாரிசு செய்தார். அதே போன்று சக்தி நாடக சபாவிற்கும் அண்ணா அவர்கள் கணேசனை சிபாரிசு செய்தார்கள்.

கணேசன் சாதாரணமாக— யாரும் அறியாத நிலையிலிருந்த போது அழைத்து புகழ் தேடி தந்தோம்! ஆனால் இன்று அரசியல் சூதாடிகள் சிலரோ, அவர் பெரும் புகழடைந்து. மக்களின் அன்பைப் பெற்ற பின் அவரை வைத்து நம்மைத் தாக்கிப் பேசுவதில் முனைந்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. ஓ. வி. அளகேசனும் திரு. கணேசனைப் பாராட்ட நடைபெற்ற விழாவில் நம்மை தாக்கி பேசி மகிழ்ச்சியடைகிறார். பேசுபவர்கள் பேசட்டும், நாம் வளர்ந்து விட்டோம்! நம்மை இனி யாரும் அழிக்க முடியாது.

இன்று கலைஉலகில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர, ராமசாமியும், லட்சிய நடிகர் எஸ். எஸ், ராஜேந்திரனும், வளையாபதி முத்துக் கிருஷ்ணனும் மற்றும் பலரும் நல்ல புகழடைந்து வருகிறார்கள். அவர்களெல்லாம் இப்போது நமது இயக்கப் பணிகளை நல்ல முறையில் செயலாற்றி வருகிறார்கள்!

நம்முடைய லட்சியமோ மிகப் பெரியது. நமது இன்பத் திராவிட நாட்டை அடைய வேண்டும், அதற்காக நாம் எந்தவித தியாகமும் செய்ய வேண்டும்!

மற்றவர்கள் நாடு சுதந்திரமடைய வேண்டுமென்று கேட்டார்கள், நாம் விடுதலை அடைய வேண்டுமென்று கேட்கிறோம்.

நாம் கேட்பதற்கும் அவர்கள் கேட்பதற்கும் மாறுபாடு அதிகம் இருக்கிறது!

நாம் ஆண்ட நாட்டை நம்மிடமிருந்த நாட்டைக் கேட்கிறோம்.

நமது அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு நல்ல வழி காட்டி அவரது தலைமையில் பணியாற்ற நாம் பெருமைப்பட வேண்டும்.

இன்று சென்னை மாநகராட்சி நம்மிடம் இருக்கிறது. அது போன்று நாம் அடுத்து சட்டமன்றத்தையும் கைப்பற்றவேண்டும்.

நம்மிடம் இன்று மாணவர் பட்டாளம் திரண்டு நிற்கிறது.

ஆகவே நீங்களெல்லாம் திரண்டெழுந்து ஒற்றுமையாகவும், கண்ணியமாகவும் அண்ணாவின் அறவழி நின்று பாடுபட வேண்டும்.

நமது லட்சிய கீதமான திராவிட நாடு திராவிடருக்கு என்ற சங்கநாதத்தை ஒலிக்க வேண்டும் அதை மறந்து விடக் கூடாது.

இன்று எனக்கு இவ்வளவு நல்ல வாய்ப்பளித்த மகளிர் மன்றத்திற்கு நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வளவு நேரம் இருந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# அழிந்து போகிறவர்கள் நம்மை ஆபாசமாகப் பேசுகிறார்கள்!

## கொள்கைகளில் குற்றம் காண முடியாதவர்கள் குடும்பங்களைப்பற்றி இழித்துப் பேசுகிறார்கள்!

### மகளிர் மன்றத்திறப்பு விழாவில் சத்தியவாணிமுத்து பேருரை,

சென்ற 23-6-60-ம் தேதியன்று சென்னை பீப்பிள்ஸ் பார்க் சாரணர் மைதானத்தில் நடைபெற்ற மகளிர் மன்ற திறப்பு விழாவில், டாக்டர் சத்தியவாணி முத்தம்மையார் பேசியதாவது:—

அருமைத் தலைவர் அண்ணியார் அவர்களே! நண்பர்களே, தாய்மார்களே பெரியோர்களே:

இன்று மத்தியப் பகுதி மகளிர் மன்ற திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது இன்று பல போட்டிப் பந்தயங்கள் நடைபெற்றது! பல தாய்மார்கள் அதில் கலந்து கொண்டார்கள்.

இந்த மகளிர் மன்ற வேலைகளில் எல்லாத் தாய்மார்களும் கலந்து கொள்ள வேண்டும். நமக்கு இனிதான் நல்ல பணிகள் இருக்கிறது. நமது மகளிர் மன்றம் நல்ல முறையில் நடைபெற நமது அண்ணியார் ராணி அண்ணாதுரை அவர்கள் பெரும் பணி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்களை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்,

கட்டுக்கோப்புடைய மகளிர் மன்றம் சென்னையிலிருந்து தூத்துக்குடி வரை வளர்ந்திருக்கிறது. சென்னையில் மகளிர் மன்றம் நல்ல முறையில் நடைபெற நான்கு பிரிவுகளாகப் பிரித்து பணியாற்ற ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

பொங்கலன்று தென் பகுதி மகளிர் மன்றம் திறந்து வைத்து அது பணியாற்றுகிறது. இன்று மத்திய பகுதி திறந்தாகி விட்டது. வட பகுதியில் நமது பாவை சற்குணம் ஏற்பாடுகள் செய்து வருகிறார்! விரைவில் அவரும் திறப்பு விழா நடத்தி அங்கு பணியாற்றுவார். பெரம்பூர் பகுதியிலும் மன்றம் ஏற்படுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது!

நமது அண்ணா அவர்கள் அவசர காரியமாக கோவை சென்றுள்ளார். அவர் அவசியம் வருவதாகக் கூறிச் சென்றார், வந்து விடுவார் என்று நினைக்கிறேன்,

எனக்குப் பின் நமது நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசப் போகிறார். நீங்களெல்லாம் பொறுமையாகவும் கட்டுப்பாடுடனும் இருந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டும். விழாக் கூட்டத்தில் இடை இடையே எழுந்து குழப்பம் செய்யக் கூடாது! எழுந்து போகப் பிரியப்படுகிறவர்கள் எழுந்து போய் விடவேண்டும்.

இன்று அரசியல் மேடைகளில் தாய்மார்களை மிக இழிவாகவும், ஆபாசமாகவும் பேசுவதாக நமது சற்குணம் கூறினார்கள்!

நமது கொள்கைகளைப் பற்றியோ நாம் கூறும் குற்றச் சாட்டுகளைப் பற்றியோ இதுவரை யாரும் குறை கூறவில்லை! அதற்கு மாறாக தனிப்பட்ட முறையில், குடும்பங்களைப் பற்றிப் பேச முன் வந்து விட்டார்கள், அப்படிப் பேசுவதால் நாம் பயந்து நமது பணிகளை நிறுத்தி விடமாட்டோம்! நமது குடும்பத்து மூத்தண்ணா நமக்கு போதித்துள்ள கண்ணியத்தை மனதில்வைத்து நமதுபணிகளைச் செய்வோம்!

அழிந்து போகும் நிலையிலுள்ளவர்கள் ஆபாசமாகப் பேசுகிறார்கள். பேசுபவர்கள் பேசட்டும். அதுவும் பெண்களாகிய நம்மை இழிவாகப் பேசுகிறார்கள். அதற்குப் பொது மக்கள் நல்ல பாடம் கற்பிப்பார்கள்.

இன்று வட நாட்டு சர்க்கார் நம் தென்னாட்டை அடிமைப் படுத்தி வருகிறது. அதைப் போக்க நமது தாய்க் கழகமாகிய திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. அதன் துணை மன்றமான நமது மன்றம் அதனுடன் இணைந்து பாடுபட வேண்டும்.

எனக்கு முன் பேசிய மூதாட்டியார்கள் மலர் முகத்தம்மையார் அவர்களும், பார்வதி அம்மையார் அவர்களும் தாமரைக் கண்ணி அம்மையார் அவர்களும் நல்ல கருத்துக்களை நமக்குத் தந்தார்கள். அவர்கள் கடந்த இந்தி எதிர்ப்புக் காலத்தில் நல்ல பணி செய்தவர்கள்! இந்தியை எதிர்த்து சிறை சென்றவர்கள் நாமும் அவர்களைப் பின் பற்ற வேண்டும்!

மலர் முகத்தம்மையார் பேசும் போது எனது மருமகள் ராணி அண்ணாத்துரை தலைமை வகிக்கிறார்! அவர் எனது மருமகள் என்று கூறினார். அப்படிக் கூறிக் கொண்டே "எல்லாம் வல்ல இறைவனருளால்" என்று கூறி முடித்தார். அதற்கு நமது அண்ணியார் கூறினார்கள். என்னை மருமகள் என்று கூறுகிறீர்கள் மருமகள் தலைமை வகித்துள்ள கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏன் எல்லாம் வல்ல இறைவனை அழைக்கிறீர்கள" என்று கேட்டார்கள.

இவ்வளவு நல்ல முறையில் நமக்குக் கருத்துக்களை எடுத்துரைத்து ஊக்குவிக்க நமது அண்ணியார் வந்து விட்டார்.

காங்கிரஸ் அரசினர் செய்து வரும் கேடுகளை எடுத்துக் கூறி மக்களிடம் பிரச்சாரம் செய்து வரும் நம்மை அழிக்கப் பார்க்கிறார்கள்.

சமுதாயத்திலும். அரசியலிலும் நாம் முன்னேற்ற மடைய வேண்டும். இனி தாய்மார்கள் அடங்கி இருக்கக் கூடாது அந்தககாலம் மலையேறி விட்டது.

ஆண்களோடு நாமும் அரசியலில் சரி நிகராகப் பாடுபட வேண்டும். ஆகவே நீங்களெல்லாம் இந்த மகளிர் மன்றத்திற்கு ஆதரவு கொடுத்து நமது கழகத்தின் கொள்கைகளை இன்னும் அதிகமாக வலுப்படுத்த வேண்டுகிறேன். வணக்கம்.

# காந்தியாரின் சிலையை உடனே அகற்றுங்கள்!

## இல்லாவிட்டால் உண்ணாவிரதம் இருப்பேன்!

## புன்னகை பூத்த முகம் எங்கே? அவரது அன்பு உருவம் எங்கே?

### ஆட்சியாளர்களுக்கு காந்தி பக்தர் எச்சரிக்கை!

சென்னை மரினா கடற்கரையிலே அமைந்துள்ள அண்ணல் காந்தியாரின் சிலையைக் கண்டிருப்பீர்கள். நீங்கள் அது எந்த நிலையில் அமைந்துள்ளது என்பதையும் நன்ருகப் பார்த்திருப்பீர்கள்.

உலக உத்தமர்-சத்தியம் தவருத சன்மார்க்க சித்தர்-அகிம்சையின் திருவுவம்-அன்பின் ஜோதி பண்பின் இருப்பிடம் மனிதருள் மாணிக்கம் மகாத்மா காந்தியின் திருவுவம் இருக்க வேண்டிய நிலையிலா அது அமைந்துள்ளது?. இல்லவே இல்லை.

பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுகின்ற ஒரு பொது இடத்திலே அண்ணல் காந்தியாரின் சிலை எந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதை நான் எடுத்துக் கூற வேண்டிய அவசியமே கிடையாது. உங்களுக்கே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளிவாக விளங்கும் விஷயமிது.

சென்னை கடற்கரையிலுள்ள அண்ணலின் சிலையில் சாந்தம் தவழும் அவரது முகத்தைக் காணோம். அறிவொளி வீசும் அந்தக் கண்களைக் காணோம்—அமைதி அரும்பும் அந்த அழகுப் புன்னகையைக் காணோம். கனிந்த நோக்கைக் காணோம். சுருக்கமாகச் சொல்லப் போனுல் காண்போரின் கருத்தை கவரத் தக்க நிலையில் அமையவில்லை அந்த சிலை, இந்நாட்டு மக்களின் இதயத்தைத் தொட்டிழுக்கும் அளவுக்கு உருவாக்கப்படவில்லை உத்தமரின் சிலை. பொதுவாக சொல்லப் போனுல் அந்த சிலை அந்த இடத்தில் இருப்பதற்கே தகுதியில்லாதது.

இதற்குக் காரணம் சிலையை உருவாக்கிய சிற்பியின் தவறு என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. தலை சிறந்த சிற்பி ஒருவரால் தான் அது உருவாக்கப்பட்டுள்ளது. அதே கடற்கரையிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் சிலையை உருவாக்கியவர் தான் இதையும் உருவாக்கியுள்ளார். ஆனுல் இந்த சிலை மட்டும் ஏன் இந்த நிலையில் அமைந்துள்ளது?......

காரணம் யாதெனில்—கல்லைக் கனியுள்ளம் படைத்த பெண்ணுக்கும் சிற்பி சாதாரணக் கல்லைக் கவின் பேரெழில் சொட்டும் பெண்ணுகப் படைக்கிருன்.

12-ம் பக்கம் பார்க்க

# நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டம் அமெரிக்க-ரஷ்ய 'வறுவல்' திட்டம் !

(கருணாநிதி பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது போக்கென்றால் மக்களுடன் விளையாடுவது. நாய்க்குட்டிகளுடன் விளையாடுவது. பூனைக் குட்டிகளுடன் விளையாடுவது மற்றும் பல விளையாட்டுகளில் ஈடுபடுவது—இது போன்ற பல செயல்களைத்தான் பொழுது போக்கு என்று கூறுவது.

அரசியலையே பொழுது போக்கிற்காக உபயோகப்படுத்தும் இந்த விந்தை மனிதரான ராஜம் ராமசாமியை என்னென்று சொல்வது?

நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பற்றிச் சட்ட மன்றத்தில் குறிப்பிடும் போது "அரசியல் என்பது பொது மக்களின் நலனுக்காகப் பாடுபட தன்னை அர்ப்பணிப்பதாகும். அதிலிருந்து கொண்டு மக்களை நல்வழிப் படுத்தவும், அவர்கள் குறைகளைப் போக்கவும் பாடுபட வேண்டும். அதைப் பொழுது போக்கிற்காக உபயோகப் படுத்துவது ஆஷாடபூதிகள் அரசியலில் அடைக்கலம் புகுவதுபோலாகும், இப்படிப்பட்ட பேர் வழிதான் நம்மை" அமைச்சுர்களென்றும், அனுபவமற்றவர்களென்றும. திறமையற்றவர்களென்றும் கூறுகிறார், இதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை என்று பேசினார்

அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கண்டவாறு. சட்ட மன்றத்தில் கூறியதும் ராஜம் ராமசாமியின் முகமே வாட்டமடைந்து விட்டது.

ஆகவே இந்த மாதிரி அரசியல் ஆஷாடபூதிகள், அரசியலை பொழுது போக்கிற்காக உபயோகப் படுத்தும் "ஹாபி பாலிடிஷியன்கள்" தாக்குவதைப் பற்றியோ இழித்து கூறுவதைப் பற்றியோ, நம்மை திறமை யற்றவர்கள் என்று கூறுவதைப் பற்றியோ நமக்கு கவலை இல்லை. ஆசாடபூதி நகரமன்றத்தில் உறுப்பினராக இருந்து வந்தாரே அப்போது இவர்கள் சாதித்ததை விட, இவர்கள் மக்களுக்காக செய்த சேவைகளை விட பன்மடங்கு அதிகமாகவே நமது தோழர்கள் செய்திருக்கிறார்கள். இதை மக்கள் உணரவே செய்வார்கள்!

இப்போது நமது கழகம். நமது கொள்கைகள் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவ ஆரம்பித்து மக்கள் நம்மை ஆதரிக்கும் நிலைக்கு வந்து விட்டதை அறிந்து அரசினர் நமக்குத் தொல்லை கொடுக்க முன் வந்திருக்கிறார்கள், எந்த கிராமததில் நமது கொடிபறக்கிறதோ, எங்குநமது கழகம் இருக்கிறதோ அங்கு அரசினர் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யமாட்டார்கள்! அங்கு கொடுக்க வேண்டிய உதவிகளை தரமாட்டார்கள். அந்த இடங்களில் பழி வாங்குவார்கள்.

இந்த சர்க்காரைத்தான் இன்று ஜனநாயக சர்க்கார் என்று கூறுகிறார்கள். இது ஜனநாயக சர்க்கரரல்ல. சர்வாதிகார சர்க்கார் என்று கூறவேண்டும். இதை மக்களும் உணர்ந்து விட்டார்கள்.

நமது மாநில சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தை சட்ட மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது! வரவு செலவுத் திட்டத்திலுள்ள கேடுகளைப் பற்றியும். அதில் அடங்கியுள்ள குறைபாடுகளைப் பற்றியும், அந்த வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்குப் பயன்படும்படியான எந்த விதமான புள்ளி விபரங்களும். இல்லையென்றும் எதிர்கட்சிகள் அனைத்தும் எதிர்த்து விளக்கம் தந்தார்கள்.

அதற்கு நிதியமைச்சர் கனம். சி. சுப்ரமணியம் பதிலளித்துப் பேசும்போது இந்த வரவு செலவுத் திட்டம் "சோஷலிச வரவு செலவு திட்டம்" என்று கூறினார்!

இதை நமது அறிஞர் அண்ணா அவர்களும், பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்களும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், எதிர்த்து அவ்விதம் கூறுவதற்கு அர்த்தமில்லையென்றும், இந்தத் திட்டத்தில் சமதர்ம வாடை வீசவில்லையென்றும், அதற்குப் பதில் பணக்கார மணம் வீசுகிறதென்றும், பெயரளவில் தான் சோஷலிச சர்க்கார் என்று கூறுகிறார்கள் என்றும், இன்று நடப்பது பணக்காரப் பாதுகாப்பு சர்க்கார் என்றும் கூறினார்கள்!

சட்ட மன்றத்தில் வரவு செலவுத் திட்டக்தைப் பற்றிப் பேசும் போது நமது அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது—

"இந்த வரவு செலவுத்திட்டம் சோஷலிசக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். இந்தத் திட்டததில் என்ன சோசலிசம் இருக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை. அப்படிக் கூறுவதில் அர்த்தமுமில்லை! இந்தத் திட்டம் முதலாளிகளையும், பொதுவுடமையினரையும் திருப்த்திபடுத்த வகுத்த திட்டம். இதை முதலாளி பொதுவுடமை திட்டம், கூட்டுத் திட்டம் என்று கூற வேண்டும், ரஷ்யா—அமெரிக்க வறுவல் திட்டம் என்று சொல்லவேண்டும் ஆணும் பெண்ணும் சேர்ந்த திடடம் என்று கூறவேண்டும் என்று குறிப்பிட்டார்,

இப்படி அண்ணா அவர்கள் கூறியதும், நிதியமைச்சர் சுப்பிரமணியம் பதிலளிக்கும் போது சாமர்த்தியமாகப் பதிலளிப்பதாக நினைத்துக்கொண்டு இது "அர்த்தநாரீஸ்வரர்" போன்றது என்று கூறினார்.

அர்த்தநாரீஸ்வரர் கதைப் பலருக்குத் தெரியுமென்றே நினைக்கிறேன் அது ஒரு புராணக் கதை.

ஒருவன் "சிவப்பக்தன்" இருந்தான் அவன் சிவனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் வணங்க மாட்டான். இதைக்கண்ட சிவன் அவனைப் பரிசோதிக்க தன் உடம்பில் ஒரு பகுதியில் தானும், மற்றொரு பகுதியில் சக்தியையும் ஒட்டிக்கொண்டிந்தார். இதைக்கண்ட பக்தன் சக்தியையும் சேர்த்து சுற்றி வந்து வணங்க சம்மதியாது ஒரு வண்டுருவெடுத்து உடம்பைத் துளைத்து சிவனை மட்டும் வணங்கினான்" இதுதான் அர்த்தநாரீஸ்வரர் கதை,

இது நமது அண்ணா அவர்கள் கூறியதுபோன்று ஆண் பெண் சேர்ந்த திட்டம் என்பது நன்றாக விளங்குகிறது.

இன்று நாம் வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றுமில்லை. அமெரிக்காவையும், ரஷ்யாவையும் திருப்திப்படுத்தும் கலப்புத் திட்டம் இந்த திட்டத்தால் யாருக்கும் நன்மை பயக்காது என்கிறோம் இதனால் நம்மீது கோபித்து பயன் என்ன ?

வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது. இங்கு எந்த வித திட்டங்களும் செய்யவில்லை என்று கூறினால் நம்மீது கோபப் படுகிறார்கள்.

இங்கு நிறுவியதாகக் கூறப்படும் பல திட்டங்களும், தனிப்பட்ட முதலாளிகளும், வெளி நாட்டு சர்க்காருடைய பணத்தாலும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதே தவிர இந்திய சர்க்காரோ மாநில சர்க்காரோ தனது சொந்தத்தில் நிறுவப் பட்டதல்ல! இங்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் பல நிறுவனங்களில் வடநாட்டு முதலாளிகள் பணம் போட்டிருக்கிறார்கள். அரசினர் சிறு தொகை போட்டு பங்குதாரர்களாக இருக்கிறார்கள். அரசினராக தனியாக நடத்தும் ஒரு நிறுவனமும் இங்கில்லை!

கோவையில் 3 கோடி ரூபாயில். ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஒரு நிறுவனத்திற்கு அரசினர் மூன்று நான்கு இலட்சம் தான் போட்டிருக்கிறார்கள். அதில் தனிப்பட்டோர் தான் பணம் போட்டிருக்கிறார்கள்.

சேஷசாயி. டி.வி.எஸ், இராமகிருஷ்ணா என்ற பல கம்பெனிகளுடன் தொடர்பு கொண்டு அரசினர் பல தொழில் நிறுவனங்கள் ஆரம்பித்து அவர்களிடம் ஒப்பித்துள்ளார்கள். இதனால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது. தனிப்பட்ட பணக்காரர்களுக்குத்தான் வசதி ஏற்படுகிறது! அதனால் தான் இந்த அரசு முதலாளிகளின் பாதுகாப்பு அரசு என்கிறோம்.

தேர்தலுக்குப் பணம் பெறுவதற்காக—நாற்பது லட்சம் ஐம்பது லட்பம் என்று பணம் வாங்குவதற்காக தனிப்பட்ட முதலாளிகள்வாழ வசதிகள் செய்து கொடுக்கிறார்கள்.

ஆகவே இந்த சர்க்கார் சோஷலிசம் என்று பெயர் வைத்துக் கொண்டு பணக்காரர்களின் நலத்தில் அக்கரை கொண்டுள்ள சர்க்காராக இருக்கிறது!

மற்றும். தூத்துக்குடியில் ஆழ்கடல் திட்டத்தைப் பற்றி எவ்வளவோ கூறியும் கவனிக்கவில்லை. சேது சமுத்திர திட்டமும் நிறைவேறவில்லை? பணம் இல்லை என்கிறார்கள்?

வெறும் புள்ளிவிபரங்களுடன் இருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை வைத்துக் கொண்டு பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பரம்பிக்குளம் தண்ணீர் திட்டத்திலும் தகராறு ஏற்பட்டிருக்கிறது!

இதுபற்றி நமது சத்தியவாணி முத்து அம்மையார் சட்ட மன்றத்தில் கேள்வி கேட்ட போது கோபப் பட்டார்கள்!

பின் பட்டம் தானுப் பிள்ளையே அதை சில தினங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டதாக அறிக்கை விட்டு விட்டார்!

மைசூர் சர்க்காருடன் 1924-ல் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் சென்னை சர்க்கார் மீறியதாக மைசூர் மராமத்து அமைச்சர் புகார் கூறினார். இந்த மாதிரி பல ஊழல்களுடன் இன்று அரசு நடைபெறுகிறது. இவைகளை மாற்றியமைத்து நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ நீங்களெல்லாம ஒத்துழைப்பதுடன், கழகம் வளர்ச்சிக்கான பணிகளில் பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்,

---

## பறக்கும் ஆப்ரேஷன் அறை

விண்ணிலே பறக்கும் விமானத்திலேயே அவசரமான சத்திர சிகிச்சைகள் செய்து முடிக்கும் பொருட்டு, மாஸ்கோ சத்திர சிகிச்சைக் கருவி ஆராய்ச்சி கழகம் "பறக்கும் ஆப்ரேஷன் அறை" ஒன்றை தயார் செய்துள்ளது. இதைக் கொண்டு வைத்திய ஹெலிகாப்டர் விமானத்தின் அறையிலே இனி இரண சிகிச்சை ஆப்ரேஷன் செய்ய முடியும். ஹெலிகாப்டர் விமானம் மலைகள், காடுகள் என்றுபாராதுஎந்தப்பிரதேசத்திலும் இறங்கக் கூடியதாகையால் இனி எவ்விடத்துக்கும் சென்று அவசர சத்திர சிகிச்சை தேவைபடுவோருக்கு காலதாமதமின்றி உடனே, சிகிச்சை செய்திடலாம். இவ்வறையில் விசேஷ முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிகிச்சை மேஜை ஒன்றும் உணர்ச்சியை அகற்றுவதற்கான சாதனங்களும், இரத்தம் கொடுப்பதற்கான ஏற்பாடும், சத்திர சிகிச்சைக் கருவிகள் மேஜை ஒன்றும் பொறுத்தப்பட்டிருக்கும்.

இந்த முதலாவது "பறக்கும் ஆப்ரேஷன் அறை" கிராஸ்னொயார்க் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

# காங்கிரஸ்காரர்களுக்கு அரசியலில் சொறி சிறங்கு பிடித்திருக்கிறது !

## காங்கிரஸ் அதள பாதாளத்தில் சரிந்து கொண்டிருக்கிறது !

## காங்கிரஸ் குளிர் காலத்தில் இருக்கிறது ! கழகத்தின் எதிர்காலம் வசந்த காலம் !

பூங்கா நகரில் உள்ள இளைஞர் முத்தமிழ் மன்றத்தினர் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் டி. வி. பாலசுந்தரம் தலைமை வகித்தார்!

பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி குறித்தும், சென்னை நகராட்சி மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சாதித்த சாதனைகள் விளக்கியும் நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் சிட்டிபாபு பேசினார்! அடுத்து தோழர்கள் கே. டி. கோவிந்தன், பொ. கு. ராமதாஸ் எம். சி, கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையினை விளககிப் பேசினர்!

இறுதியில் நாஞ்சில் கி. மனோகரன் பேசினார். அவர் பேசியதாவது—

## நாஞ்சில் கி. மனோகரன் விளக்கவுரை!

பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, பேரன்பு கொண்ட திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, தோழர்களே, மாணவர்களே!

இளைஞர் முத்தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெறும் இச்சிறப்பு கூட்டத்தில் நானும் பேசுகின்ற வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தோழர்களுக்கு முதல் முதலில் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்!

இளைஞர் முத்தமிழ் மன்றத்தினர் முதலில் என்னை அழைத்து கூட்டம் போட்ட போது மழை காரணமாக நான் பேச முடியாமல் போய் விட்டது! அதை முன்னிட்டு இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

தலைவர், அருமை நண்பர் ஆர்வத் துடிப்பு உள்ளவர்; கடமை உணர்ச்சி கொண்டவர்! ஆறு மாத காலம் முயற்சி செய்தார்! அவரும் வெற்றி பெற்றார்–நானும் வெற்றி பெற்றேன்!

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியங்கள் குறித்தும், சாதனைகள் குறித்தும் பேசினார்கள்!

இந்த கூட்டத்தில் முத்தமிழ் மன்ற சார்பில் திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை வலிவு படுத்தவும், வளர்ச்சி பெறவும் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்!

இங்கே ஒரு நண்பர் கேள்வி தாள் ஒன்றைக் கொடுத்தார். வேறொன்றுமில்லை, அளகேசனைப் பற்றிய கேள்வி தான் அது! அளகேசன் தி. மு. கழகத்தைப் பற்றி தாக்குகிறாரே அதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டிருந்தார்!

நாட்டு மக்களின் இதயத்திலே துடிகொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஆட்சியிலே உள்ளவர்கள் கச்சை வரிந்து கொண்டு எந்த இடமானாலும் சரி, பேசுவது யாராய் இருந்தாலும், அமைச்சர்களாயிருந்தாலும் சரி—காங்கிரஸ் கட்சிக்கே புதியவர்களாயிருந்தாலும் சரி, தங்கள் கட்சியின் லட்சிய கீதம் பற்றி பேசுவதற்கு பதிலாக திராவிட முன்னேற்றக் கழகத்தை தாக்கி வருகிறார்கள். கழகத்தின் கருத்துக்களைப் பற்றி பேசினால் வரவேற்போம்; அதற்கு மாறாக தலைவர்களை தாக்கி பேசி வருகின்றனர். இவ்வளவு சிறப்பு மிகுந்தக் கூட்டத்தில் நானும் அவர்கள் போல பேசினால் அது பெருந்தன்மையாகாது. காரணம், நான் பெருந்தன்மையுள்ளக் கட்சியைச் சேர்ந்தவன்!

நாட்டு மக்களின் மனநிறைவு, கழகத் தோழர்கள் முறை தவறி பேசமாட்டார்கள் என்பது. மாற்றார் ஏசிப் பேசினாலும் நாம் பண்பிலே இருந்து தவற மாட்டோம் என்று மக்கள் மனநிறைவு கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று நாம் கூறுகிறோம் ஒருகட்சியின் இலட்சணம்என்ன? எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கின்ற வாதத்திற்கு தக்க முறையில் பதிலளிப்பது தான் ஆட்சிக் கட்சியின் உண்மையான ஜனநாயகமாகும்!

வடக்கு வாழவில்லை தெற்கு தான் வளருகிறது—வாழுகிறது என்று ஆதாரம் காட்டினார்களா என்றால் இல்லை ! பன்னிரெண்டு வருட ஆட்சியில் வடக்கு வாழ்கிறதா, தெற்கு வாழ்கிறதா என்று புள்ளி விபரம்—ஆதாரம் காட்டிப் பேசினார்களா?

கழகக் கூட்டமென்றால் பத்தாயிரக் கணக்கிலே கூடுகிறார்கள்! அதைக்காணுகின்ற போது மாற்று கட்சிக்காரர்களுக்கு ஆத்திரம் வருகிறது ! காங்கிரஸ்காரர்களின் இதயத்திலே வேதனைத் தீ கிளம்பினால் திராவிட முன்னேற்றக் கழகத்தை தாக்கி பேசுகிறார்கள்.

காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வேன், இந்த பரிதாப நிலைக்கு ஆளாகதீர்கள் என்று!

கழகத் தோழர்கள் பேச ஆரம்பித்தால் காங்கிரஸ்காரர்கள் எப்படியும் கூட்டத்தை கலைத்து விட வேண்டுமென்று குழப்பம் செய்கின்றனர். துணிச்சல் உள்ள காங்கிரஸ்கரார்கள் பேசுகின்ற பேச்சாளர்கள் மீது கல்லெறிந்து கூட்டத்தை கலைத்துவிட பெரு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

தாக்கிப் பேசுவதோடு மட்டுமின்றி கழகத் தலைவர்களை மிகவும் கீழ்த்தரமாகவும் பேசி வருகின்றனர். தலைவர்களை மட்டுமல்ல, அவர்களின் குடும்பம் வரை இழித்துப் பழித்தும் பேசி வருகின்றனர். காங்கிரஸ் இத்தகைய அரசியல் நாகரீகத்தால் அழிந்து வருகிறது!

இப்படிப்பட்ட நிலைமை வளர்ந்தால் இந்த நாட்டின் எதிர் காலம் சுவை உள்ளதாக இருக்காது. மனிதர்கள் உணர்ச்சி வயப்படுவது இயல்பு! காங்கிரசில் உள்ளவர்கள் அத்தனை பேரும் வாலிப வயதினர் அல்ல—அதிலே இருப்பவர்கள் எல்லோருக்கும் போகிற வயது! அவர்கள் நிலை கண்டு பரிதாபப் படுகிறோம். நம்மிடத்திலே இருப்பவர்கள் இளைஞர்கள். நம்மை எதிர்க்கட்சிக்காரர்கள் எப்படித் தாக்கிப் பேசினாலும் நமக்கு நாட்டுமக்களிடையே நல் ஆதரவு நம்பிக்கை வளர்ந்து வருகிறது! அத்தகைய பேராதரவு பெற்ற இயக்கத்தின் ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம். ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டது. கழகப் பேச்சாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்களானாலும் சரி, செயற்குழு உறுப்பினர்களானாலும் சரி, கிளைக் கழக தோழர்களானாலும் சரி, கடந்த 11 ஆண்டுகளாக அரசியலிலே தரம் தாழ்ந்து போய் விடாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அரசியலை தரத்தோடு வளர்த்துக் கொண்டு வருகிறார்கள்!

திராவிட முன்னேற்றக்கழகத்து மேடைகளிளே நாட்டு மக்களுக்கான நல்ல கருத்துக்கள் அளிக்கப்படுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடையே வளர்கின்ற இயக்கமாகும். கழகத்தின் சிறந்த பணிகளைப்பற்றி தலைநகரத்திலே உள்ளவர்களாகிய நீங்கள் அதிகம் உணர்ந்தவர்கள் என்பதை நான் அறிவேன்!

காங்கிரஸ் தலைமை பீடத்திலே உள்ளவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை நாட்டு மக்களிடையே அருவெருப்பான முறையில், காலித்தனமாக முறைதவறி கேலி பேசி வருகிறார்கள். இது மன்னிக்க முடியாத செயலாகும். நாட்டு மக்கள் இதைக்கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

கழக வரலாற்றை நீங்கள் அறிவீர்கள். 1949–ம் ஆண்டு செப்டெம்பர் 17–ந் தேதி அன்று ராயபுரத்திலே துவக்கப் பட்டதென்பதை அறிவீர்கள். 49–ஆம் ஆண்டிலே துவக்கப்பட்ட இயக்கம் 1960–லே கழகம் நிறைவு பெற்ற இயக்கமாக, ஜனநாயகத்தின் பாதுகாப்புபேரரணாக இயங்கி வருகிறது!

ஜனநாயகத்தை காப்பாற்றுபவர்கள் என்பதை விளக்குவதற்கு இரண்டொரு நிகழ்ச்சிகளை நினைவு படுத்த விரும்புகிறேன்!

கழகம் துவங்கிய நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக இருந்தார். கழகத்திலே ஈடுபாடு கொண்டிருக்கும் தோழர்கள் மறந்திருக்கமாட்டார்களென்றும் கருதுகிறேன். இதை தோழர்கள் தவறாக எண்ணி விடக் கூடாது!

அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சியினர் கழகம் வளருமா என்று பேசினர். திராவிடர் கழகத்திலே இருந்து திராவிட முன்னேற்றக் கழகமாக பிரிந்த நேரத்தில்—அப்பிளவை காங்கிரஸ்கரார்கள், தங்கள் கட்சி வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ள நினைத்தனர். தாய்க் கழகமான திராவிடர் கழகமே திராவிட முன்னேற்றக்கழகத்தை இழித்தும் பழித்தும் பேசி வந்தனர் !

இத்தனை இடிகளுக்கும் ஆட்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் வளர ஆரம்பித்தது! அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல் கார்டு வாங்க காசில்லாத நிலையில் அன்று இருந்தோம். இன்று தமிழ், கன்னட, கேரள, ஆந்திர மாநிலங்களிலே கிளைக் கழகங்களும், மாவட்டக் கிளைகள் துவங்கிய பிறகு தான்—கழகத்தில் அருமையான வளர்ச்சி ஏற்பட்ட பிறகு—கட்சிக்கு புதிய பொதுச் செயலாளர் தேவை என்று அண்ணா குறிப்பிட்டார்கள்.

மாற்றுக் கட்சிக்காரர்களின் எதிர்ப்பையும், மற்றவர்களது மன எரிச்சலையும் சமாளித்து நமக்குள் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு—விந்தியத்திற்கு அப்பாலும் நமது கொள்கை விதை விட்டதற்கு பிறகு—போராட்டக் காலங்களில் திராவிட முன்னேற்றக்கழக முன்னணி வீரர்களின் இரத்த காட்சிகள் உண்டானதற்கு பிறகு தான்—எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சென்னை தியாகராயர் கல்லூரியில் நடைபெற்ற பொது குழுவில் அண்ணா அவர்கள் கழகத்திற்கு புதிய பொதுச்செயலாளரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்றார் உறுப்பினரைப் பார்த்து!

உறுப்பினர்கள் அத்தனைபேரும் நீங்கள் தான் பொதுச் செயலாளராக இருக்க வேண்டுமென்று அண்ணாவை கேட்டுக் கொண்டார்கள்,

இதை விளக்குவதற்கு காரணம்—மாற்றுக் கட்சிக்காரர்கள் நரகல் நடையிலே கழகம் ஜனநாயகத்திற்கு புறம்பாக நடக்கிறது என்று கூறுகிறார்களே அவர்கள் உணரமாட்டார்களா என்ற எண்ணத்தால் தான்!

11–ம் பக்கம் பார்க்க

# ஜனநாயக அடிப்படையில் பணியாற்றி வருவது நமது கழகம்!

## அதை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டியவர் அறிஞர் அண்ணு !

(மனேகரன் பேச்சு)

(10–ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அண்ணு அவர்கள் அருமையான விளக்கம் அளித்தார்கள்.

கட்சியிலே உள்ளவர்கள் தலைவர்களை நம்பி வாழக் கூடாது, தனித்தலைவனை நம்பி வாழாதீர்கள். தனித்தலைவர் ஒருவரை நம்பியதால் தான் புதிய கழகம் உருவானது, தனித் தலைவன் கருத்து செல்வாக்கை இழக்கும் போது கட்சியும் செல்வாக்கை வ:க்கை இழந்து விடும். காலத்தின் நெருக்கம் ; தலைவனை இழக்கும் போது கட்சியும் இறங்கி விடும் என்று உணர்ச்சிகரமான விளக்கமொன்றை அளித்து தகுதி வாய்ந்த ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்ருர்,

இன்னெரு பொதுச் செயலாளரை நீங்கள்தான் சொலல வேண்டும் என்று கேட்டார்கள்.

அண்ணு அவர்கள்—எனது யோசனையும், ஆலோசனையும் இயக்கத்திற்கு எப்போதும் உண்டு. அண்ணுத்துரைக்கு பிறகு கழகத்தைக் கட்டிக்காக்க ஆள் இல்லை. என்ற நிலை இல்லாமல் இவர் இவர் இருக்கிருர்கள் என்று கட்டிக் காக்க வேண்டும். ஆகவே புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். என்ருர்!

நேருவின் பூதகரமான உருவம் தெரிகிறது! நேருவுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியை நடத்த யார் இருக்கிருர்கள் என்று கேட்டால்—அந்தக் கேள்வுக்கு கிடைக்கிற பதில் சூன்யப் பிரதேசம் தான்! நேரு தன்னை வளர்த்துக் கொண்டார், ஆனல் அவருக்கு பிறகு யார் என்பதை தெளிவாகச் சொல்லவில்லை! இதனையும் அண்ணு அவர்கள் சுட்டிக் காட்டினர். அதற்குப் பிறகு அவருக்கு பக்கத்திலே இருந்த நாவலர் நெடுஞ்செழியன் மீது கண் விழுந்தது. உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஏகோபித்து நெடுஞ்செழியன் அவர்களை பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

பின்னர் அண்ணு அவர்கள் பேசிய பேச்சில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஜனநாயகம் வலிவுள்ளது பொலிவுள்ளது என்பதை சுட்டிக்காட்டினர்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை முழுக்க முழுக்க ஜனநாயக அடிப்படையாகும்!

திராவிட முன்னேற்றக் கழகம் கொடுமை ஆட்சிக்கு இறையானதை நீங்கள் அறிவீர்கள்.

கட்டாந் தரையை பூந்தோட்டமாக்கிய தானைத்தலைவன் அறிஞர் அண்ணு! அண்ணு அவர்களைப் பற்றி அமைச்சர் பக்தவத்சலம் ஒரு புத்தகத்தில் குறிப்பு எழுதியயிருந்தார்—

அண்ணுதுரை பேச்சைக் கேட்பதற்கு லட்சக் கணக்கில் கூடுகிருர்கள். அவர் ஆறு மணிக்கு வருவதாக இருந்து இரவு பத்து மணி ஆனுலும் காத்திருந்து அவர் பேச்சைக் கேட்கிருர்கள்.

—இதைச் சொன்னது அமைச்சர் பக்தவத்சலம்! இவருடைய சகலன் தான் அளகேசன் என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

அண்ணு அவர்கள் அன்பு உள்ளத்தால், பண்பால் பழக்கத்தால் நாட்டு மக்களின் இதயத்தை சூறையாடி விட்டவர்.

காங்கிரஸ்காரர்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மூன்று லட்சம் உறுப்பினர்கள் மட்டுமே இருக்கிருர்கள். காங்கிரசுக்கு பல லட்சக் கணக்கில் உறுப்பினர்கள் இருக்கிருர்கள் என்று கூறுகிருர்கள்.

கழகத்திற்கு மூன்று லட்ச உறுப்பினர்கள் தான்! ஆனல் சென்ற தேர்தலில் கழகத்திற்கு வாக்களித்தவர்கள் பதினேழு லட்சம் பேர். இதைக் காங்கிரஸ்காரர்கள் யோசிக்க வேண்டும்.

நாம் தேர்தலில் நின்ற போது காங்கிரஸ்காரர்கள், இவர்களுக்கு ஐந்து ஓட்டு கிடைக்குமா. டிபாசிட் வாங்குவார்களா: இவர்களில் ஒருவராவது ஜெயிப்பார்களா என்று கேட்டார்கள். கேட்டவர்கள் இன்னும் உயிரோடிருக்கிருர்கள் !

சட்ட மன்றத்திலே பதினைந்து பேராவேம். பாராளு மன்றத்திற்கு இருவரை மக்கள் அனுப்பினர்கள். அதிலே ஒருவர் கடந்தோள் வீரர் அருமை நண்பர் சம்பத், மற்றெருவர் நண்பர் தருமலிங்கம்.

இத்தனை பேரும் சட்ட மன்றத்தில் என்ன செய்கிருர்கள் என்பதைப் பத்திரிகை படிப்பவர்கள் அறிவார்கள்.

கழகம் உருவாக்குகின்ற திட்டத்தின் பேரில் பொது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். கழகப் பணியிலே ஆர்வம் கொண்ட ஆற்றல் படையினர்-அறிவுப் படையினர் கழகத்திலே இருக்கிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கைக் குறைக்க, அண்ணு அவர்கள் மீதுள்ள காய்ச்சலால் காங்கிரஸ்காரர்கள் தங்களை அளகேசன் தரத்திற்கு ஆளாக்கிக் கொண்டு பல்வேறு முறையில் பேசி வருகின்றனர்.

‘தி. மு. கழகத்தை ஒழித்துக் கட்டுவதே என் வேலை. அப்போது தான் தூக்கம் வரும்! என்று அளகேசன் மேடைக்கு மேடை கூறி வருகிருர், இப்படிக் கூறினல் தூக்கம் வரும்—நிச்சயமாக நெடுந் தூக்கம் வரும்!

அண்ணு அவர்கள் காஞ்சி தேர்தலில் நின்றபோது அமைச்சர்களும்அளகேசனும்அண்ணுவைத் கண்டபடி பேசினர்.

எதிர்க்கட்சித் தலைவனை தோற்கடிக்க ஒரு இயக்கமா? அண்ணு அவர்கள் இதைப்பற்றி ஒரு மேடையில்—

“என்னை ஒழிப்பதற்காக காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும், அரசியலில் இருக்கிருரா இல்லையா என்ற அளவிலே இருக்கும் சிவஞானமும், மதச் சார்புடைய கட்சிகளும் அத்தனையும் போததென்று யாரை என் அருமைத் தந்தையெனக் கருதிக் கொண்டிருந்தேனே அந்தப் பெரியாரையும் அழைத்து வந்தார்கள். ஒரு முகமாக நின்று எதிர்த்தார்கள். ஊர்க் குருவியைக் கொல்ல ராமபாணம் தேவையா?” என்று கூறினர்!

அரியலூர் விபத்துக்குப் பிறகு அவரது வாய்க் கொழுப்பு டில்லி தேர்தலில் தோற்கடிக்கச் செய்தது அளகேசன், வாய் தவறி என்பதற்குபதிலாகவாய்துடிப்பாக நமதுஅருமை நண்பர்களின் பெயரைச் சொல்லி மதியழகனும் மயிரழகனும் என்று பேசினர். அதன் விளைவு அவரால் டெல்லி செல்ல முடியவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடித்தால்தான் காங்கிரஸ் கட்சி வாழும் என்று நினைத்து தமிழக மெங்கும் சுழல் வேக பிரச்சாரம் செய்து கழகத்தைச் பற்றிஅனுவசியமான முறையில் எண்ணற்ற பொய் கருத்துக்களை கூறி வருகிருர்!

அந்த எண்ணத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் எண்ணுவது போல் கழகம் கிள்ளுக்கீரை அல்ள. நாங்கள் பரவ பரவ நீங்கள் பட்டமரவீர்கள்!

படித்தவர்களும், அருமை தோழர்களும். தாய்மார்களும் தொண்டாற்றி வருகின்ற லட்சிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஏன் நமது இயக்கத்தை பொதுமக்கள் ஆதரிக்கிருர்கள்! காரணம் நாம் எடுத்துச் சொல்லும் அரசியலைப்பொதுமக்கள் ஏற்கிருர்கள்!

இப்போது இருக்கின்ற ஆட்சியை ஜனநாயக ஆட்சி என்றும், மக்கள் ஆட்சி என்றும் கூறுகிருர்கள். இதைப்பற்றி முன்ஷி அவர்கள் முன்பு விளக்கம் ஒன்றை அளித்தார்!

இது மக்களாட்சி அல்ல—தலைவர்களுக்காக தலைவர்கள் நடத்துகின்ற ஆட்சி என்று கூறினர்!

மக்கள் என்ருல் பெருபான்மையினர் மட்டுமல்ல என்று காங்கிரஸ் மூலவர்கள் உணர வேண்டும். மக்கள் என்ருல் பெரும்பான்மையும் சிறுபான்மையும் உள்ளடக்கியதுதான்! இதை காங்கிரஸ் ஆட்சியினர் அறிய வேண்டும்!

இப்போது என்ன நடக்கிறது? அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் குளித்தலை தொகுதிக்குசென்றிருந்தார்! அப்போது அந்தத் தொகுதி விவசாயிகள் தங்கள் குறைகளை மகஜர் மூலமாக அமைச்சரிடம் தெரிவித்தார்கள். குளித்தலை தொகுதிக்கு எம்.எல் ஏ. நண்பர் கருணுநிதி என்பதை நீங்கள் அறிவீர்கள். அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள்—

நீங்கள் கருணுநிதிக்குத் தானே ஓட்டுப் போட்டீர்கள்! அவரிடம் போங்கள் என்று கூறி விட்டாராம்

நேரு ஜனவரி ஆரும் தேதி அன்று சென்னை வந்தபோது கழகத்தின் கறுப்பிக் கொடி காட்டியதை அறிவீர்கள்! அப்போது ஆட்சியாளர்கள் சேரி வாழ் மக்களை அடித்து சிறைச்சாலைக்கு அனுப்பினர்- சிந்தாதிரி பேட்டையிலே இருந்த சிலரைப் பிடித்து அன்பழகனுக்குத்தானே ஓட்டுப் போட்டீர்கள் என்று கேட்டுகேட்டு போலீஸ்காரர்கள் அடித்ததை மறந்திருக்க மாட்டீர்கள்! இது தான் மக்கள் ஆட்சி என்ருல், மக்கள்—பெரும்பான்மையினர் தான் என்று சொன்னுல் முட்டாள்கள் ஆட்சியே மக்கள் ஆட்சி என்று சொல்ல வேண்டும்!

ஆட்சியிலே உள்ளவர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவது முக்கியமல்ல என்று கருதுகின்றனர்.

பெரும்பான்மையினரின் நிழல் சிறு பான்மையினர் என்று சிறந்த ஒரு ஆங்கிலப் பேராசிரியர் கூறினர்!

சட்டசபையில்நடைபெறுகின்ற ஒரு மசோதாவின் விவாதத்தில் எதிர்க்கட்சிக்காரர்களும், ஆட்சியில்யுள்ள கட்சிக்காரர்களும் பேச வேண்டும். அதைப் பற்றி ஆட்சிக்காரர்கள் அதிக நேரம் பேசுவதும், மாற்றுக் சட்சிக்காரர்கள் நீண்ட நேரம் பேசுகின்ற சந்தர்ப்பத்தை பெறுவதில்லை. எதிர்க் கட்சிக்காரர்கள் குறைந்த நேரம் பேசுவதும் சரியானதல்ல.

உதாரணத்திற்கு ஒன்று கூறுவேன் அன்பழகன் அரை மணி நேரம் பேசுகிருர் என்ருல் ஆட்சியாளர்களுக்கும் ஆட்சியாளர் அரை மணி நேரம் பேச வேண்டும், இரு கட்சிகளும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்.

(12–ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285 இலங்கையில் 20 சதம்

(மனோகரன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தின் அடிப்படை டிபேட், டிஸ்கஷன் என்பதாகும். விவாதத்தை மையம் புள்ளியாக வைத்து வாதிக்க வேண்டும். புதிய ஆழ்ந்த முடிவுக்குப் பின்னர் எல்லோராலும் நிறைவேற்றப்பட்டு சட்டமாக வெளியே வரும்.

இங்கே எதிர்க் கட்சிகளை பேச அனுமதிப்பதில்லை. பேசுவதை அலட்சிய பாவத்தோடு பார்க்கிறார்கள், ஆட்சியிலே உள்ளவர்கள் எதிர்க்கட்சிகளிடத்திலே பயமற்ற முறையில் கட்சியின் நோக்கத்தோடே இருக்கிறார்கள். ஆட்சிக் கட்சியினருக்கு நாட்டு நலன் தான் முக்கியம், கட்சி நிலை பிற்பாடு!

கட்சி வளர்கிற போது தான் ஜனநாயகமும் வளர்கிறது! காங்கிரஸ்காரர்களிடத்திலே அது இல்லை! காங்கிரசிடத்திலே ஜனநாயகம் இல்லை தன்னை பின்பற்ற கண்மூடிக் கொண்டு ஒரு படை இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் திட்டமானாலும் அதனை பொதுக் குழுவில் ஆராய்ந்து எல்லோரும் மன நிறைவோடு நிறைவேற்றப்பட்ட பிறகு தான் சட்டமாகசுப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் வளமுள்ளது. கழகத்தின் நலன் கருதி பல தோழர்கள் நல்ல கருத்துக்களை கூறி வருகின்றனர்! இது வளர்ந்து வரும் கழகத்திற்கு அழகு. இதனுடைய ஒரு கூறு தான் சம்பத கழகத்திற்கு அளித்திருக்கும் கருத்து!

இதனை காலித்தனமாக சிலர் திரித்தி சொல்லி வருகின்றனர்! அனுதாபம்!

ஏற்கெனவே உள்ள பட்டாக் கத்தி என்றாலும் கூர்மையான தாக்க வேணடும் என்று சம்பத் கூறியுள்ளார், நம்மை நாமே கட்டுப் படுத்திக்கொள்ளவேண்டும் என்று கழகம் பொறுப் பேற்று கொண்டிருக்குறது. காஙகிரஸ்காரர்கள் பட்டாக் கத்தியைப் பிடித்து தொங்கினால் உயிர் துஞ்சாது.

குடும்பத்தில் உள்ள பெரிய சக்தியை மேலும் வலுப்படுத்த வேணடுமென்பதே சம்பத்தின் கரை காணாத ஆசை, அதை பொதுக் குழுவிற்கு அனுப்பி வைத்திருக்கிறார். மானங் கெட்டவனே, உனக்கென்ன வேலை!

திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் சக்தி தாங்கிக் கொண்டிருக்கிறது. சிதம்பரத்தில் அளகேசன் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் சக்தி இல்லை. சினிமாக் கட்சிக்காரர்கள் தொலைந்து போவார்கள் என்றார். அவரே இப்போது சினிமா நடிகரை தங்கள் கட்சிக்கு காட்சிப் பொருளாக வைத்துக் கொண்டிருக்கிறார்.

# காங்கிரஸ் லட்சியத்திற்காக பல ஆண்டுகள் உழைத்து வந்தேன்!

## அண்ணலின் சிலையைப் பழித்துப் பேசுவதை என்னால் சகிக்க முடியாது!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் அவனது திறமை மிக்க செயலை எல்லோருமே போற்றுவது கிடையாது. இது தான் உலக இயல்பு. காரணம் யாதெனில் அழகை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து ரசிக்கின்றனர் என்பதே யாகும்.

இது போன்று தான் அண்ணல் காந்தியாரின் சிலையை உருவாக்க முனைந்தவர்; அதை செவ்வனே தான் செய்து முடித்துள்ளார். ஆனாலும் அது இம்மாதிரிப் பொது இடத்திலே இருப்பதற்குத் தகுதியில்லாத சிலையாகும். இதை நான் மட்டும் குறிப்பிடவில்லை. அந்த சிலையைக் காணுகின்ற ஒவ்வொருவரும் இதே கருத்தைத் தான் வெளியிடுகின்றனர். அவ்வளவு ஏன்? சிலையை செய்த சிற்பியே ஒப்புக் கொள்வார் இதை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

சென்னைக் கடற்கரையில் இந்த சிலையைத் திறந்து வைத்த நேரத்திலே, அறிஞர் பெருமக்களும் ஆன்றோரும் சான்றோரும்—ஆகாத செயல் இதுவென அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறினர். தமிழகமே தனது கண்டனத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக நமது பிரதமர் நேரு அவர்களே சிலையின் அமைப்பு சரியில்லை என்று எடுத்துக் கூறிதை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது!

பலரும் பற்பல விதமாகப் பேசுகின்ற இந்தப் பிரச்னை குறித்து நமது மேன்மை மிக்க அரசாங்கம் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது எனதுள்ளத்தை பெரிதும் துன்பத்திற்குள்ளாக்குகிறது.

நான் என்னுடைய பதினைந்தாவது வயதிலேயே வாழ்க்கையின் சகல சௌகர்யங்களையும் துறந்தவன். "பொது சேவையில் ஈடுபட்டோர் பூணும் ஆபரணம் பொன்னகை இருக்க முடியாது இரும்புச் சங்கிலியை மாட்டிக் கொள்ளவும் நெஞ்சம் இடந்தர வேண்டும்" என்ற அறிஞர் பெரு மக்களின் அறிவுரையை என் இதயத்திலே ஏந்தி—எத்தனை தான் எதிர்ப்புகள் இமயம் போல குறுக்கிட்டாலும் தொல்லைகள் துரத்தி வந்தாலும் அத்தனையும் துச்சமென மதித்து அண்ணல் காந்தியாரின் அம்சை தத்துவத்தைக் கடைப் பிடித்து காங்கிரஸ் இயக்கத்திலே ஈடுபாடு கொண்டவன் நான்.

1946-ல் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக திரு. கே. காமராசர் அவர்கள் இருந்த நேரத்தில் எவ்வித' கைமாறும் கருதாமல் நாட்டு விடுதலையே குறிக்கோளாகக் கொண்டு உணவையும், உறக்கத்தையும் மறந்து உழைத்த தொண்டர்களிலே நானும் ஒருவன். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினனாகவும், தீவிர உறுப்பினனாகவும் இருந்துள்ளேன்.

அன்னாள் தொட்டு இன்னாள் இந்த 29-வது வயது வரையிலும் காங்கிரஸின் லட்சியத்திற்காகவே நான் உழைத்து வருகிறேன்,

என்னுடைய இந்த உணர்ச்சிக்கும் உத்வேகத்திற்கும் காரணம் வண்ணையம்பதியில் தோன்றிய காமராசர் தேசீய சங்கமேயாகும் என்று சொன்னால் அது மிகையாகாது!

கடற்கரை காந்தியார் சிலையைப் பற்றி பலரும் பற்பல விதமாகப் பேசுகின்ற நேரத்திலே— அதை கேட்கின்ற போது என்னிதயம் தணலிடை மெழுகாக, அனலிடைப் புழுவாக நிலைமாறித் தவிக்கிறது அண்ணலின் சிலையைப் பலரும் இழித்தும் பழித்தும் பேசுகின்றதைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு தாங்க முடியாத துன்பம் ஏற்படுகிறது, உலக உத்தமரின் உருவச் சிலையைப் பற்றி ஊரார் பேசுவதைக் கேட்பதற்கே சகிக்கவில்லை, அவ்வளவு ஆபாசமாக அமைந்துள்ளது அவர்கள் பேசுகின்ற அந்தப் பேச்சுக்கள்.

---

**கழகத்தின் கருத்துக்கள் வளர்ந்து வருகின்றன. மாநில முழுவதும் வளர்ச்சி பெற்று வருகிறது. ஆகவே நமது கருத்துக்கள் மேலும் பரவ வேண்டும், 1962 வரப்போகிறது ஞாபகமிருக்கட்டும். அடக்கு முறையால் நமது இயக்கத்தை ஒழிக்க நினைக்கின்ற ஆட்சியை சீழே இறக்க வேண்டும், அதற்கான பணியிலே தோழர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.**

**ஒரு சில சந்தர்ப்ப வாதிகளும் சதி மதி படைத்தவர்களும். சூழ்ச்சியும—சுயநலமும் என்றும் ஆட்சி புரியும். 'என்ற அற்ப ஆசை கொண்டவர்களும்-இந்த சாதாரண விஷயத்தைப் பல்வேறு அரசியல் பிரச்னைகளாக மாற்றி மக்களிடையில் தவறான பிரச்சாரம் செய்வதைக் காணும் போது—உள்ளபடியே நான் பெரிதும் வேதனைப் படுகிறேன். தாங்கொணா துன்பம் அடைகிறேன்!**

**எவனோ இத்தகைய நிலைமைகளுக்கு எப்படியும் ஒரு முடிவு காணவேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடு நிலைமைகளைத் தெளிவாக விளக்கி—பிரதமர் நேரு, முதலமைச்சர் திரு. கே. காமராஜர், ராஜேந்திர பிரசாத் முதலான பல்வேறு அரசாங்கத் தலைவர்களுக்கும் தமிழகத்தின் அரசியல் கட்சி தலைவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன். அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கமாவது;—**

**1, அண்ணல் காந்தியாரின் சிலை அந்த இடத்தில் இருந்தால் நமது வருங்கால சந்ததியார் காந்தியாரின் உண்மை உருவத்தைக் காண முடியாத பரிதாப நிலை நிச்சயம் ஏற்படும் என்பது திண்ணம்! எனவே அதை நீக்கி சென்னை எழும்பூர் கண்காட்சியில் வைக்க வேண்டும்.**

**2. முன்பு சிறை செய்தவரையே மீண்டும் புதிய பொலிவுள்ள ;சிலையை உருவாக்கும்படிக் கூறவேண்டும்.**

**3. அல்லது தானே செய்து வைக்க முற்படும் தனிப்பட்ட நபர்களிடத்தில் அந்த பொறுப்பை ஒப்டைக்க வேண்டும். ஆயிரக் கணக்கானவர்கள் அந்த பொறுப்பை செய்து முடிக்க ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.**

**இது குறித்து அரசியலாளர் ஏப்ரல் 5-ந் தேதிக்குள் எவ்வித பதிலும் தராவிட்டால் காந்தியாருக்கு ஏற்பட்ட அவமதிப்பை நீக்கிட—காங்கிரஸ் தொண்டனாகிய நானே வருகின்ற ஏப்ரல் மாதம் 13-ம் தேதி தமிழ் வருடப் பிறப்பன்று அண்ணலின் சிலைக்கருகிலேயே "உண்ணாவிரத போராட்டம்" ஆரம்பிப்பதென முடிவு செய்து விட்டேன். ஏப்ரல் 13-ந் தேதியுடன் காந்தி சிலை வைத்து ஒரு வருடம் முடிவடைகிறது என்பதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.**

**சிலையை அகற்றும் வரையில் என்னுடைய போராட்டம் நீடிக்கும்—இதனால் என்னுடைய உயிரே போனாலும் நான் கவலைப்படவில்லை. ஆனால் சாகும் போதுகூட காங்கிரஸின் லட்சியங்களைத் தாரக மந்திரமாகக் கொண்ட ஒரு சாதாரணத் தொண்டனாகவே நான் சாக விரும்புகிறேன். இதுதான் என்னுடைய பேராவல்—பெவிருப்பம்,**

தங்களன்பன்,

**ஜி. சுப்புராஜன்**

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.